தலையங்கம்

## பிரம்மாவுக்கும் படைத்தலுக்கும் என்ன சம்மந்தம்

அனைத்து ஆத்மாக்களின் பரம தந்தை, ஜோதி சொரூபமாக விளங்கும் சிவபரமாத்மா, ஒவ்வொரு கல்பத்திலும், கலியுக இறுதியில் படைப்பை புதுப்பித்தல் எனும் தனது கடமையை நிறைவேற்றுவதற்காக, பிரம்மா என பின்னாளில் அழைக்கப்பட்ட ஒரு மனிதரின் உடலில் பரகாய பிரவேசம் மூலமாக அவரை தன் கருவியாக ஆட் கொண்டு, அவர் வாய் மொழி வழியாக வெளியிடப்பட்ட படைப்பைப் பற்றிய அரிய உண்மைகளை பாரபட்சமின்றி படிக்கும் எவரும் வியப்பில் ஆழ்ந்துவிடும் புத்துணர்வையும், மகிழ்ச்சியையும் பெறுவார்கள் என்பது சர்வ நிச்சயம்.

மனித குல வரலாற்றில் **1969ம் ஆண்டு ஜனவரி 18** ஒரு ஒப்பற்ற நாள். பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட வேண்டிய மகத்தான நாள். மனிதன் இருளிலிருந்து விடியலை நோக்கி நடை போடுவதற்கு நம்பிக்கையூட்டிய நாள். ஆதலால் மனிதன் மறக்க முடியாத நாளாகவும் இருக் கின்றது. ஏன்? இதற்கு 33 ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த சம்பவம், புத்துலக படைப்பிற்கு அஸ்திவாரம் ஆகிவிட்டது. இம்மகோன்னத காரியத்திற்காக, அசரீரியான சிவபரமாத்மா பிரம்மாவின் உடலில் பிரவேசம் செய்தார். பிரம்மா அறியாமலேயே திடீரென நடந்த சம்பவம் இது. எனினும் சிறிது, சிறிதாக உணர்ந்து புரிந்து கொண்ட பிரம்மா, பரமாத்மா தன் மூலமாக வெளியிட்ட அருள் மொழியின் இரகசியத்தை அறிந்தார். கிடைத்தற்கரிய பாக்கியம் கிடைத்து விட்டதையும் புரிந்து கொண்டார். அது முதல் செல்வம் கொழிக்கும் வைர வியாபாரமும், ராஜ பிரபுக்கள் உறவும், வருமானமும் பொருளற்றதாக உணர்ந்தார். தன்னையும், இது வரையிலும் தன்னுடையது என்று கருதியிருந்த சொத்து, சுகம், அனைத்தையும் இறை பணிக்கே

## சங்கமயுகம்
## பொருளடக்கம்

**மலர்: 26 டிசம்பர் 12 - ஜனவரி** 13 **இதழ்: 5**


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 01 |
| 2. | பகவான் வாக்கு | 06 |
| 3. | விரிவான சேவை | 07 |
| 4. | ஆரோக்கிய வாழ்விற்கு ..... | 10 |
| 5. | இராஜயோகத்தில் அஷ்டமா சித்திகள் | 21 |
| 6. | ஆதி தேவ் பிரம்மாவும் ஓம் மண்டலியும்..... | 25 |
| 7. | சிறுகதை | 30 |
| 8. | கேள்வி - பதில் | 32 |


இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலி ருந்து தொகுத்து வழங்கப் பட்டவையாகும்.

ஆசிரியர்

**"தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி"**



அர்ப்பணித்து விட்டு முழு முதல் டிரஸ்டியாக ஆகிவிட்டார். இறைவன் காட்டிய வழியில் அல்லும் பகலும் இறை பணி தொடர்ந்தது. தான் அடைய விரும்பிய பிறவிப்பயனை சம்பூரண மாகவே அடைந்து விட்டதாகவும் புரிந்து கொண்டார். எனினும் இவர் ஆற்ற வேண்டிய இதனினும் பெரிய பணி இவருக்காகக் காத்திருந்தது. காலத்தின் வேகம் துரிதமாகிக் கொண்டே இருக்க ஸ்தூல உடலைத் துறந்தார். மனிதன் என்ற நிலையிலிருந்து தேவதா நிலைக்கு உயர்ந்தார். மனித குலத்தை அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுவிப்பதற்காகவும், பழுதடைந்துவிட்ட இன்றைய கலியுக அழிவு மற்றும் புது உலக ஸ்தாபனை எனும் உலகளாவிய மறுமலர்ச்சிக்கான காரியத்திற் காகவும், சிவபரமாத்மாவோடு இணைந்துவிட்ட அந்த நாள் ***1969ம் ஆண்டு ஜனவரி 18.*** இந்த நாள் அசாதாரணமானது, புதுமையானதும், புனித மான நாளாகவும் ஆகிவிட்டது.

இது நாள் வரையிலும் மனிதன் இப்பூமியில் கடல் வழி சென்று ஏதோ ஒரு புதிய நிலப்பரப்பைக் கண்டிருக்கலாம். நிலவில் கால் பதித்திருக்கலாம். இமயத்தின் சிகரத்தில் கொடியும் நாட்டியிருக்கலாம். இவை நாமறிந்த அற்புதங்கள். ஆனால் இவையெல்லாம் எல்லைக்குட்பட்ட சம்பவங்களே. ஆனால் பிறவியில் கட்டுண்ட ஜீவாத்மாவும், பிறவிக்கு அப்பாற்பட்ட பரமாத்மாவும் உலக புனருத் தாரண காரியத்திற்காக, இணைவதும், இப்பூமியில் இதற்காக மனிதனுக்கு எல்லையற்ற ஞானமும், இராஜயோகமும் கற்பித்து, மனிதனை தேவதா நிலைக்கு உயர்த்துவதுமான பரமாத்மாவின் இச்செயல், மனிதன் கனவிலும் கண்டிராத அற்புதம் மட்டு மல்ல, முற்றிலும் நிதர்சனமான நிகழ்வாக வும் இருப்பதைக் கண்கூடாகக் காண்கி றோம். ஆதலால் உலக நாடக அரங்கில் அவரவர் பாத்திரத்தின் நடிப்பில் மூழ்கி யிருக்கும் ஒவ்வொரு ஜீவாத்மாவுக்கும் மீண்டும் இச்செய்தி நினைவுக்குக் கொண்டு வரப்படுகிறது என்றால், இதை விட **இனிய செய்தி இப்புத்தாண்டில்** வேறென்ன இருக்க முடியும்.

நாடகமே உலகம் என்ற சொல் வழக்கில் உள்ளது. நாடகம் என்றால் இதில் மூன்று அழிவற்ற சக்திகள் சம்மந்த முடையதாக இருக் கின்றது. முதலாவது சக்தி, பிரதான சக்தியாக விளங்கும் பரமாத்மா. ஜோதி சொரூபமாக விளங்குகின்றார். பரமாத்மா அனைத்தையும் அறிந்தவராக, சர்வ வல்லமையும் அதிகாரமும் உடையவராக என்றென்றும் மாறாத தன்மை யுடையவராக இருக்கின்றார். இரண்டாவது ஜோதி சொரூபமான ஆத்மாக்கள். பரமாத்மாவின் இயல்புகள் ஆத்மாக்களில் அடங்கியிருந்தாலும், இவைகள் பிரகிருதியின் சம்மந்தத்தில் மாறும் தன்மைக்குட்பட்டவையாக இருக்கின்றன. இத்துடன் அந்தந்த ஆத்மாவின் நாடகப்பாத் திரத்தின் பதிவுகளும் ஆத்மாவில் அடங்கியிருக் கின்றன. மூன்றாவது பஞ்ச தத்துவங்களாலான இயற்கை. இயற்கையும் அதன் சட்டப்படி மாறும் தன்மையுடையதாகவே இருக்கின்றது. பஞ்ச தத்துவங்களாலான பூலோக நாடகத்தில் ஆறாவது தத்துவமாகிய பிரம்ம தத்துவமும் சம்மந்தமுடையதாக இருக்கின்றது என்ற உண்மை அறிதல் வேண்டும். ஏனெனில் நாடகத்தில் சம்மந்தமுடைய பரமாத்மா மற்றும் ஆத்மாக்களின் இருப்பிடம் பிரம்ம தத்துவம். இங்கிருந்து தான் நடிப்பதற்காக பூலோக நாடக மேடைக்கு வரவேண்டும். இங்கு தனக்குக் கிடைக்கும் உடல் மூலமாக நடிக்கவும் வேண்டும். இவ்வாறு பிறவியில் கட்டுண்டதாக ஆன்மாக்கள் இருக்கின்றன. ஆனால் **பரமாத்மா வாகிய கடவுள் நாடகத்தில் சம்மந்தம் கொண்டிருந்தாலும், பிறவிக்கு அப்பாற்பட்ட வராகவே இருக்கின்றார். நாடக சம்மந்தத்தில் வரும்போது தற்காலிகமாக இன்னொரு உடலில் பரகாய பிரவேசம் செய்கின்றார் இங்கு வருவதும் இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்று**

விடுவதாகவும் இருக்கின்றார்.

பரமாத்மாவாகிய கடவுள் எப்போது கீழிறங்கி வருகின்றார் என்பது தான் நாடகத்தின் பிரதான அம்சமாக இருக்கின்றது. நாடகத்தில் இங்கு எத்தனை கோடி மனிதர்கள் (ஜீவாத் மாக்கள்) இருக்கின்றனரோ, அத்தனை ஆத்மாக்களும் பிரம்ம தத்துவத்திலிருந்து இறங்கி வந்த ஆத்மாக்கள் தான். ஆத்மாக்கள் அனைத்தும் தூய்மை யுள்ளவையாக, அமைதி அனுபவத்தில் பிரம்ம தத்துவத்தில் இருக் கின்றன. அற்புதம் என்னவென்றால், நாடகக் காட்சிக்கேற்றவாறு, ஆத்மாவில் உள்ள பதிவுகளின் அடிப்படையில், ஒவ்வொன்றாக இறங்கி வந்து கொண்டு மிருக்கின்றன. இதனடிப் படையில் நாடக ஆரம்பத்தில் ஜனத்தொகை (ஜீவாத்மாக்களின் எண்ணிக்கை) மிகமிகக் குறைவு தான். அதாவது 2500 ஆண்டுகள் வரை சுமார் 2 கோடி ஆத்மாக்கள் இங்கு வருகை தந்திருக்க, மற்ற ஆத்மாக்கள் பிரம்ம தத்துவத் திலேயே ஓய்வில் இருக்கின்றன. நாடகத்தின் முதற்பாதியான 2500 ஆண்டுகள் முற்றிலும் சதோபிரதானம் மற்றும் சதோசாமான்யம் என்ற நிலையில் தூய்மையாகவும், அமைதியாகவும், அன்பு, சுகம், செல்வச் செழிப்பு நிறைந்த ஒன்றாகவும், இருக்கின்றது. ஆன்மாக் களின் இந்த உயர் தன்மை காரணமாக இயற்கை தத்துவங்களும் தூய்மையாகவே இருக்கின்றது. இதுவரையிலும் இங்கு வருகின்ற ஜீவாத்மாக் கள் தெய்வீகத் தன்மையுடையவர்களாக இருப்பதன் காரணமாக, குற்றங்கள் நடப்பதில்லை. ஆரம்பக்கல்விப் பள்ளிகள் உண்டு. காவல் நிலையங்கள் மற்றும் நீதிமன்றங்களுக்கும் மருத்துவ மனைகளுக்கும் அவசியம் இருக்க வில்லை. மேலும் வழிபாட்டுத் தலங்களோ, வழிபாடுகளோ இல்லை. இங்கு அரசாட்சியும், தர்மமும் ஒருவர் பொறுப்பில் தான் இருக்கும். இது தான் பரமாத்மாவாகிய கடவுள் ஸ்தாபனை செய்த தெய்வீகப் படைப்பாக இருக்கின்றது. இதில் முக்கியமானது இயற்கையையோ, ஆன்மாக்களையோ கடவுள் படைக்கவில்லை. இவை அனாதி, இதில் கடவுளாகிய பரமாத்மா வின் பங்கு என்ன? எப்போது? என்று பார்க்கலாம்.

2500 ஆண்டுகளுக்குப் பிறகு காலமானது இயற்கைச் சட்டத்தின் நியதிப்படி (Universal Law of nature) அதிக மாறுதலுக்குட்பட்டதாகி விடுகிறது. இந்த நியதி என்பது இயற்கையின் தன்மை (தூய்மையின் சக்தி) சிறிது சிறிதாக தரம் குறைந்து கீழ்முகமாக தொடர்ந்து தாழ்வு நிலையடைந்து கொண்டே யிருக்கிறது. இயற்கையின் இந்த நியதி ஆரம்பத்திலிருந்தே இருந்து வந்தாலும், இதன் பாதிப்பு ஆரம்பத்தில் அவ்வளவு இருப்பதில்லை. காலம் கடந்த பின்னர் இதன் பாதிப்பு உணரப் படுகிறது. அதாவது இயற்கையில் (தத்துவங் களில்) ஏற்படுகின்ற இந்த பாதிப்பு ஆத்மாவை யும் பாதிப்பிக்குள்ளாக் குகிறது. ஏனெனில் ஆத்மாக்கள், பஞ்ச தத்துவத்தாலான சரீரத்தில் இருப்பதாலும், மறுபிறவி எடுப்பதாலும் இயற்கைச் சூழ்நிலை காரணமாகவும், பாதிப்புக் குள்ளாகிறது. இவ்வாறு ஆத்மாக்கள் சக்தியை இழந்து விடுவதால், சரீர கர்மேந்திரியங்களுக்குக் கட்டுப்பட்டதாக ஆகிவிடுகிறது. இதன் காரணமாக தனது செயலை சீர்தூக்கிப் பார்க்கவோ, தவறா, சரியா என்று நிர்ணயிக்கவோ முடிவ தில்லை. இதனால் தவறுகள் நடக்கின்றன. இதன் தொடர்பான விளைவுகளையும், வினைப் பயனையும் அனுபவம் செய்ய வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகி விடுகிறது. இந்த சமயத்தில் புதிதாக மேலிருந்து கீழிறங்கி வரும் ஆத்மாக்களுக்கு ஆரம்பத்தில் இத்தகைய பாதிப்புகள் இருப்பதில்லை. இவ்விதமாக நாடகம் தொடர்கிறது. துன்பங்கள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. ஆதலால் கடவுளின் உதவி நினைவுக்கு வர தேடலும், வழிபாடுகளும் ஆரம்பமாகின்றன. இது துவாபர யுகம். இதன் கூடவே குற்றங்களும் அதிகமாகிக் கொண்டே வர பாதுகாப்புக்காக காவல் நிலையங்கள், நீதி

மன்றங்கள், மருத்துவ மனைகள் ஆகியவற்றின் அவசியம் நேரிட்டு விடுகிறது. இந்த நிலை எப்படி வந்தது? நாடகத்தின் முதற்பாதியான 2500 ஆண்டுகள் ஆத்மாக்கள் சரீரத்தில் இருந்தாலும், தூய்மையின் சக்தி இருந்த காரணத்தால் கர்மேந்திரியங்களுக்கு எஜமானனாக இருந்தது, இதனால் சுதந்திரமாகவும் இருந்தது. ஆனால் இதன் பிற்பகுதியில், ஆத்மாக்கள் பாதிப்பின் காரணமாக தூய்மை சக்தியை இழந்து விடுவதால், கர்மேந்திரியங்களுக்கு அடிமையாகி அறியாமையின் காரணமாக சரீர உணர்வு களுக்கு கட்டுப்பட்டதாகி, தவறுகளும், துன்பங் களும் அனுபவிக்க வேண்டியதாகி விடுகிறது. இது கலியுகம். நாடகத்தின் இறுதியான நேரத்தில் துன்பங்கள் மிக அதிகமாகி விடுகின்றன.

நாடகத்தில் கட்டுப்பட்டு, பந்தனத் திலும், துன்பத்திலும் உழன்று கொண்டி ருக்கும் ஆத்மாக்களுக்கு, இதிலிருந்து விடுதலை அளிக்கும் பங்கு நாடகத்தில் பரமாத்மாவாகிய கடவுளினுடையதாக இருக்கிறது. இதன்படி நாடகத்தின் பிற்பகுதியும் 2500 ஆண்டுகள் தான். ஆகவே இது 5000 ஆண்டுகள் கொண்ட நாடகம். இது முடிவில்லா நாடகம். ஒரு சக்கரம் சுழல்வது போன்று தொடர்ந்து நடந்து கொண்டே யிருக்கிறது. நாடக முடிவில் ஒட்டுமொத்தமாக எல்லா ஆத்மாக்களும் விடுவிக்கப்படுகின்றன. விடுதலையான ஆத்மாக்கள் பிரம்மதத்துவ மாகிய வீட்டிற்கு ஓய்விலிருக்கச் சென்று விட்டாலும், நாடகத்திற்கு முடிவில்லை யாதலால், நாடகத்தின் ஆரம்ப காட்சியில் வர நிச்சயிக்கப் பட்ட ஆத்மாக்கள் சீக்கிரமாகவே திரும்பி கீழிறங்கி வந்து விடுகின்றன. ஆரம்பத் தில் முதல் 2500 ஆண்டுகள் வரை வருகின்ற ஆத்மாக்களின் வாழ்க்கை அனுபவம் எப்படி இருக்கிறது? இதன் பிறகு வரும் ஆத்மாக்களின் வாழ்க்கை அனுபவம் எப்படி இருக்கிறது என்பதை இதுவரையிலும் தெரிந்து கொண்டோம். இது ஏன்?

பொதுவாக நாடகத்தின் கடைசிக் காட்சி யானது ஆர்வத்தைத் தூண்டுவதாகவும், வியப்பாகவும், விறுவிறுப்பாகவும் இருப்பதைப் போலவே இந்த 5000 ஆண்டு நாடகத்தின் கடைசிக் காட்சியும் மிக அற்புதமானதாக அமைந்திருக்கிறது எனலாம்.

பரமாத்மாவாகிய கடவுள், ஆத்மாக்கள் மிகவும் துன்பத்தில் இருக்கும் சமயத்தில் கீழிறங்கி வருகின்றார் என்று பார்த்தோம். இது நாடகத்தின் இறுதியான நேரமாகும். ஆத்மாக் களுக்கு ஆத்மாவைப் பற்றியும், பரமாத்மாவைப் பற்றியும், நாடகத்தைப்பற்றியும் ஞானம் அளிக்கின்றார். இந்த ஞானத்தின் வழி நடக்க வேண்டியதன் அவசியத்தையும், இதன் பலனையும் கற்பித்து, நடைமுறையில் கொண்டு வருவதற்கு உதவும் யோகமும் கற்பிப்பதன் மூலம் சக்தியையும் அளிக்கின்றார். கர்மத்தின் விளைவுகளைப்பற்றியும், சொர்க்க வாழ்வு பற்றியும் கற்பிக்கின்றார். அசரீரியாக விளங்கும் பரமாத்மா, ஜீவாத்மாக்களுக்கு எப்படி கற்பிக்க முடியும்?

இங்கு தான் பிரம்மாவின் பங்கு ஆரம்ப மாகிறது. அசரீரியான பரமாத்மா, இங்கு வரும் போது ஒரு வயோதிகரின் உடலில் பரகாய பிரவேசம் செய்கின்றார். அவருக்கு பிரம்மா என பெயரிடுகின்றார். அவரது கர்மேந்திரியங்கள் மூலமாக ஞானம் அளிக்கின்றார். பிரம்மாவுக்கு ஞானம் கிடைக்கும் அதே சமயத்தில், மற்ற ஆத்மாக்களுக்கும் ஞானம் கிடைக்கிறது. தொடர்ந்து பிரம்மாவும், தான் கற்றறிந்த ஞானத்தை தன்னுடைய அனுபவத்தையும் சேர்த்து மற்ற எல்லா ஆத்மாக்களுக்கும் அளிப்பதற்காக, இராஜயோக நிலையங்கள் எனும் அமைப்பை தோற்றுவிக்கின்றார். இவ்வாறாக இதைப்பற்றி அறிய விழையும் அனைவருக்கும் ஞானம் கிடைக்கிறது.

இவ்வாறு ஞானவழி நடந்து, தங்களை சம்பூரண தூய்மையாக ஆக்கிக் கொண்டவர்கள்,

தூய்மையான ஆத்மாக்கள். இவர்கள் நாடகத்தின் ஆரம்ப காட்சியில் மற்றும் முற்பகுதியில் பிறவி எடுக்கின்ற தகுதியுடையவர்கள் ஆகின்றனர்.

இதன் மூலம் அழிவற்ற இந்த ஆத்மாக்கள் நாடகத்தின் இறுதியில் ஒவ்வொரு முறையும் (5000 ஆண்டுகளுக்கொருமுறை) பரமாத்மாவால் படைக்கப்படுவதில்லை. ஞான யோகத்தின் மூலம் புதுப்பிக்கப்படுகின்றனர். ஆதலால் படைப்பு என்பது புதுப்பித்தல் என புரிந்து கொள்ள வேண்டும். மேலும் பரமாத்மா புதுப்பித்தல் எனும் காரியத்தை, தான் செய்தாலும், பிரம்மாவின் சரீரத்தில் இருந்து கொண்டு, பிரம்மா மூலமாக செய்விக்கின்றார். செய்பவர் அசரீரியான வராதலால் பிரம்மா தான் செய்கிறார் என்று புரிந்து கொண்டு, பின்னாளில் புதுப்பித்தல் எனும் காரியத்தையும், படைத்தல் என்று நினைத்து விட்டனர். ஸ்தூல உருவில் இருக்கும் பிரம்மா தான் இப்படிச் செய்கின்றார் என்று கருதிவிட்ட நிலையில் இந்த மனித சிருஷ்டி பிரம்மாவின் படைப்பு என்று தவறாக புரிந்து கொண்டு விட்டார்கள்.

## ஆத்ம நினைவில் இரு ! உறுதியாய் இரு!

பி.கு. தமிழரசி, இரத்தன்பஜார், சென்னை

விதியை நொந்து வீதியில் அலைந்திட்ட
எனக்கு விலாசம் தந்து

விசாலாமாயிருக்கக் கற்று தந்தாய்!

துக்கத்தில் பாதி தூக்கத்தில் பாதியாய் ஆன
என்னை

அமிருதவேளையில் அமரச்செய்து
அமராகும் வழி சொன்னாய்!

சக்தியிழந்து சக்கையாகிப்போன என்னை
சக்கரத்தைச் சுற்று சத்கதியடைவாய் என்றாய்!

இப்படியான உலகில் எப்படி
நான் வாழ்வேன் என நிற்க

ஸ்ரீமத்படி நட உலகம் உன்
காலடியில் என்றாய்!

தினந்தினம் கேள்விபல நான் கேட்க
பலப்பல சொல்லியும் பதறாமல் இருக்கும்
என்னிடம் இது இறுதி வேளை

ஆகவே உறுதியாய் இரு
ஆத்ம நினைவில் என்றாய்!

## புத்தாண்டு 2013 மற்றும் பொங்கல் நல் வாழ்த்துக்கள்

### புத்தாண்டே வருக! வருக!



**பாரதப் பொன்னாட்டின் பொற்காலம் காணும் புனிதப் பயணத்திலிருக்கும் அனைத்து ஆன்மீக சகோதர, சகோதரிகளுக்கும் சங்கமயுகம் இதழ் தொடர்ந்து வெளிவர நல் ஆதரவும், ஆசிகளும் வழங்கிக் கொண்டிருக்கும் வாசகர்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

- ஆசிரியர்




# பகவான் வாக்கு

**இனிமையான ஆன்மீகக் குழந்தைகளே!**

உங்களுக்கு உத்தமமான ஞானம் கற்பித்து உங்களை இன்றைய சாதாரண மனித நிலையிலிருந்து பூஜைக்குரிய ஸ்ரீ நாராயணனாகவும், ஸ்ரீ லட்சுமியாகவும் மாற்றுவது தான் உங்களது ஆன்மீகத் தந்தையாகிய எனது கடமையாகும். நான் அளிக்கின்ற ஞானமும், என் மூலமாக நீங்கள் அடையப்பெறுகின்ற சாந்தியும், உங்களுக்கு உரிமையுள்ள ஆன்மீகச் சொத்தாகும். இதனை அடைவதற்கு உங்களுக்கு முழு உரிமையும், அதிகாரமும் உண்டு. தந்தையின் சொத்து குழந்தைக்குத்தானே!

இப்பிறவியில், இந்த அதிகாரத்தை உங்களுக்கு வழங்குவதற்காகவே நான் பரந்தாமத்திலிருந்து வந்திருக்கின்றேன். காரணம், என்னை நீங்கள் முற்றிலும் மறந்தே போய்விட்டீர்கள்.

நான் இப்பொழுது உங்களுக்கு அளிக்கின்ற படைப்பைப்பற்றிய ஞானம் மற்றும் நான் உங்களுக்குச் செய்யும் சேவையை ஏற்றுக் கொண்டு என் வழி நடந்து மனம்-சொல்-செயலில் சம்பூரண தூய்மை அடையுங்கள். உங்கள் மனதை என்னிடம் செலுத்தி என் மீது முழு நம்பிக்கை வைத்து பேரானந்த சுகம் அடையப் பெறுவீர்களாக!




# விரிவான சேவைக்கான துவக்கம்

**(பி.கு. ரமேஷ் ஷா, கூஷ மும்பை, காம் தேவி அவர்களுடைய கட்டுரை செப்டம்பர் 2012 மாத ஞானமிர்தம் இதழில் பிரசுரிக்கப்பட்டதன் தமிழாக்கம்)**

கடந்த 2-3 வரவு செலவு கணக்கு கூட்டத்தில் ஈஸ்வரிய சேவையானது ஆரம்ப கால கட்டத்தில், சமர்ப்பணம் ஆகியதன் விழா, பாடல், நாடகம் மற்றும் இவைகள் தொடர்பான காரியங்கள் மூலமாக சேவையில் முன்னேற்றம் எப்படி ஏற்பட்டது போன்ற விவாதங்கள் நடைபெற்றது. ஆனால் இவை அனைத்தும் நடந்து கொண்டிருந்தாலும் அன்பிற்குரிய பிரம்மா பாபா அவர்கள் 1963-ல் ஒரு நாள் சாகார முரளியில் இதுவரையிலும் விரிவான முறையில் ஈஸ்வரிய சேவை செய்வதற்கு வலது கரமாக ஒரு குமார்/குமாரி எனக்கு கிடைக்கவில்லை என்று கூறியிருந்தார்.

அந்த சமயம் நான் மும்பையில் இருந்தேன். நானும் சகோதரி உஷா அவர்களும் பாபா கூறிய விஷயத்தைப்பற்றி சிந்தனை செய்தோம். பிறகு நம்முடைய பிரம்மா பாபாவிற்கு மதிப்பு, சிநேகம் மற்றும் உண்மையின் ஆதாரத் தில் ஒரு கடிதம் எழுதுவது என்று முடிவெடுத் தோம்.

கடிதத்தில் - பாபா, நாம் எந்த ஒரு காரியத்தை செய்தாலும் அது ஸ்ரீமத்தின் ஆதாரத்தில் செய்ய வேண்டும், நாம் தன்னுடைய வழிப்படி செய்தோமானால் அது, தன் மனவழி ஆகிவிடுகிறது. விரிவான முறையில் சேவை செய்ய வழிமுறை தேவை, அவை தங்களுடைய ஸ்ரீமத் மூலம் தான் எங்களுக்கு கிடைக்க முடியும். தாங்கள் அந்த சேவைக்கான வழி முறைகளை உருவாக்கி கொடுத்தால் தங்களுக்கு அவசியம் வலது கரமாக ஆகிவிட முடியும். ஆகவே தயவு செய்து விரிவாக சேவை செய்வதற்கான வழிமுறையை எங்களுக்கு தந்துதவவும், என நாங்கள் எழுதினோம்.

இந்த கடிதத்திற்கு பிரம்மா பாபா ஒரு நீளமான பதில் கடிதம் எழுதியிருந்தார். அதனுடைய சுருக்கம்:- விரிவான சேவையை குழந்தைகள் செய்யாமல், அதற்கான காரணங் களை எழுதிவிட்டு முழு பொறுப்பையும் என் மீது போட்டு விட்டார்கள். இருந்தாலும் பாபாவிற்குத் தெரியும் ஒருவேளை குழந்தை களுக்கு விரிவான சேவைக்கான வழிமுறையைக் கூறிவிட்டால் அப்போதும் கூட குழந்தைகள் சோம்பலாகி விடுவார்கள், பிறகு சாதனங்கள் மீது சிலந்தி வலை பின்னிவிடக்கூடும்.

அன்பான பிரம்மா பாபாவின் இக்கடிதத் தைப் படித்த பிறகு எங்களது மனதில் மிகுந்த ஊக்கம், உற்சாகம் நிரம்பி வழிந்தது. நாங்கள் பாபாவிற்கு இவ்வாறு பதில் எழுதினோம்: - பாபா தங்களுடைய கடிதத்தைப் படித்த பிறகு எங்களுக்கு இராமாயணத்தில் வரும் தசரத இராஜாவின் ஒரு செயல் நினைவிற்கு வந்தது. இராஜா தசரதனின் ஒரு தவறான செயலால் அவருடைய ஏதாவது ஒலி வருகின்ற திசையில் குறிவைத்து செலுத்தக் கூடிய அம்பு சிரவண குமார் மீது பாய்ந்து விட்டது. சிரவண குமாரின் சப்தம் கேட்டது, ஓ! பகவானே எனக்கு என்ன ஆயிற்று. இராஜா தசரதன் உடனே ஓடினார், சிரவண குமாரின் இறுதிக்கான சுவாசம் வந்து கொண்டிருந்தது. இராஜா சிரவண குமாரிடம்

மன்னிப்பு வேண்டினார். அப்போது இராஜாவிடம் என்னுடைய தாய் தந்தைக்கு அந்த நதியின் நீரைக் கொடுத்து பருகச் செய்யுங்கள் என்று கூறி தனது இறுதி சுவாசத்தை விட்டு விட்டான். இராஜா கவலையோடு நதியின் நீரை ஒரு மண்பாண்டத்தில் எடுத்துக் கொண்டு சிரவண குமாரின் தாய் தந்தையரிடம் விரைந்து சென்று பருகச் செய்தார். சிரவணனின் தாய்-தந்தை இவர் தங்களுடைய மகன் இல்லை என புரிந்து கொண்டனர். இராஜா, நான் பாவி என் மூலமாக நடந்த தவறினால் உங்களுடைய மகன் கொலை யுண்டான் என்று கூறினார். இதைக் கேட்டு சிரவணனின் தாய்-தந்தை மிகவும் துக்க மடைந்தனர். அவர்கள் இராஜாவிடம் எங்களுக் காக ஒரு சிதை தயார் செய்யுங்கள், நாங்கள் மூன்று பேரும் ஒரு சேர சொர்க்கத்திற்குச் சென்று விடுவோம் என்றனர். ஆனால் அதற்கு முன்பாக உங்களுக்கு இந்த சாபத்தை அளிக் கிறோம் : நாங்கள் எவ்வாறு மகனை இழந்து புத்திர சோகத்தில் சரீரத்தை விடுகிறோமோ, அதே போல் ஏ! இராஜா நீங்களும் கூட புத்திர சோகத்தால் சரீரத்தை விட வேண்டியிருக்கும் என்றனர். இராஜாவோ இது சாபமா அல்லது வரதானமா என்று யோசித்தார், ஏனெனில் இது வரை எனக்கு புத்திர பாக்கியமே இல்லையே. சிரவணனின் தாய்-தந்தையின் சாபத்தின் அடிப்படையில் (ஆதாரத்தில்) எனக்கு மகன் பிறப்பான் என்பது நிரூபணமாகிறது. அப்படி மகன் பிறக்கவில்லை யெனில் அம்மாதிரியான ஒரு நிலையில் இறப்பதற்குப் பதில் புத்திரனை (இழந்த சோகத்தில்) இறப்பது இலட்சம் மடங்கு நல்ல விஷயம். ரிஷியின் விஷயத்தை சாபம் இல்லை வரதானம் என்று எண்ணுகிறேன். (இவ்வாறு இராஜாவின் சிந்தனை ஓடியிருக்கிறது)

நான் பிரம்மா பாபாவின் கடிதத்திற்குப் பதிலாக தங்களது கடிதத்தைப் படித்த பிறகு எங்கள் இருவரின் மனதிலும் ஓர் எண்ணம் உருவாயிற்று அதாவது தாங்கள் இப்போது சேவைக்கான சாதனம் தராவிட்டால் அதன் பொறுப்பு உங்களுடையது மற்றும் ஒருவேளை தங்களின் ஸ்ரீமத்படி எங்களுக்கு சேவையை விரிவாக்குவதற்கான சாதனம் கிடைத்தும் அதை பயன்படுத்தாமல் இருந்தால் நாங்கள் அதற்கு பொறுப்பாளர்களாக ஆகிறோம். ஆகவே, அன்புக்குரிய பாபா, எங்களுக்கு அந்த சேவைக் குரிய சாதனத்தை தந்தருளுங்கள். நாடகத்தில் என்ன நடக்குமோ அதை எதிர்காலம் தான் கூறும்.

இந்த கடிதத்தைப் பெற்ற பிறகு பிரம்மா பாபா அவர்கள் எங்கள் இருவருக்கும் சேவையை விருத்தி செய்வதற்கான வரதானம் அளித்தார். இந்த கடிதப் போக்கு வரத்து 1963ம் வருடம் டிசம்பர் மாதத்தில் நடந்தது. அதன் பிறகு ஜனவரி, 1964ல் மரியாதைக்குரிய மாதேஸ்வரி அவர்கள் உடல் நலக்குறைவைப் பற்றிய செய்தி வந்தது. மாதேஸ்வரி அவர்கள் இதன் காரணமாக மும்பையிலுள்ள எங்கள் இல்லத்திற்கு வந்தார். இதற்கு முன் கூட எங்களுடைய லௌகீக வீட்டில் எட்டு மாதங்கள் தங்கியிருந்தார். உடல் நலக்குறைவின் காரணமாக அவருக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றது, அதன் பிறகு ஜூன் 1964ல் மாதேஸ்வரி அவர்கள் அபு சென்று விட்டார்.

இதனிடையே ஒரு சம்பவம் நிகழ்ந்தது, 1964 ஏப்ரல் மாதத்தில் எனது லௌகீக காரியாலயத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந் தேன், முன் பகல் 12 மணி அளவில் மனதில் திடீரென ஒரு சங்கல்பம் வந்தது, தாமே சித்திரங்கள் தயார் செய்து கண்காட்சியில் படங்கள் மூலம் ஞானத்தைப் புரிய வைப்பது மிகவும் எளிது என்பது. உடனடியாக வாட்டர்லூ மேன்சன் சென்டர் சென்றேன். அங்கு தாதி பிரகாஷ்மணி முக்கிய மேலாளராக இருந்தார். நான் வந்துள்ளதற்கான காரணம் கேட்டார். தாங்கள் பிரம்மா பாபாவிற்கு, படக் கண்காட்சி யின் ஏற்பாடுகளை நாங்கள் செய்து

தர விரும்புவதாக ஒரு கடிதம் எழுத வேண்டு மென கூறினேன். இதனால் சேவை விருத்தியாக (விரிவாக) முடியும். இதைக் கேட்ட தாதி நிர்மல் சாந்தா அவர்கள் மிகவும் நன்றாக ஒத்துழைப்பு கொடுத்தார். தாதிஜி அவர்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதி அனுப்புகிறேன் என்றார். இதை சிந்தி பாஷையில் எழுதித் தாருங்கள், அபு மலையில் உள்ள பாபாவிற்கு நான் அனுப்பி விடுகிறேன் என்று கூறினேன். கடிதத்தில் படக் கண்காட்சியில் என்ன நடக்கிறது, எப்படி படங்களை தயார் செய்வேன் முதலான அனைத்து விஷயங்களையும் எழுதினேன். தாதிஜி அவர்கள் எதுவுமே கேட்கவில்லை, இதனால் தாதிஜியைப் பற்றிய மதிப்பு சினேகம் அதிகம் உண்டாயிற்று. மேலும் தாதிஜிக்கு எவ்வளவு பெருந்தன்மை உள்ளது என்பதை எண்ணினேன். எந்தவித கேள்வியும் கேட்காமலே எனக்கு முழு ஒத்துழைப்பு தர தயாராகி விட்டார். தாதிஜியின் சகயோகமின்றி இந்த படக்கண்காட்சி மூலம் சேவையின் விருத்தி விரிவாக்கம் ஏற்பட்டிருக்க (உருவாகி யிருக்க) முடியாது என்பதை இன்றும் கூட ஏற்றுக் கொள்கிறேன். இரவில் எங்களுடைய லௌகீக வீட்டில் மாதேஸ்வரிக்கு உணவு பரிமாறும் சமயம் படவிளக்க கண்காட்சியின் சேவையைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினேன். அவரும் இந்த சேவை விரிவாக்கத்தைப் பற்றி தனது கருத்துக்களையும் எடுத்துரைத்தார்.

அதன் பிறகு ஒரு ஞாயிறன்று வாட்டர்லூ மேன்ஷன் சென்டரில் மீட்டிங் நடத்தி படங்கள் உருவாக்கும் காரியம் ஆரம்பமாயிற்று. வகுப்பிற்கு வந்து கொண்டிருந்த பகவான் சகோதரர் நல்ல ஓவியராக இருந்தார். அவரிடம் திட்டத்தைப்பற்றி விளக்கினோம். அவர் முதலாவதாக உண்மையான வைஷ்ணவர் யார் என்ற ஓவியத்தை தயார் செய்ய வழிகாட்டினார். படத்தின் விளக்கத்தை நாங்கள் எழுதி அபுவிற்கு அனுப்பி வைத்தோம். அதில் பிரம்மா பாபா அவர்கள் திருத்தம் செய்து திரும்ப அனுப்பினார். திருத்தங்களிலிருந்த எழுத்துக்கள் யாருடையதாக இருக்கும் என்ற கேள்வி மனதில் எழுந்தது, யார் இந்த திருத்தங்களைச் செய்தது? என பிரம்மா பாபாவிற்கு எழுதி கேட்டபோது, அவர் குமாரக்கா என்ற குழந்தை என்ற பதில் அளித்தார். மீண்டும் நான் பாபாவிற்கு கடிதம் எழுதினேன், அதில் பாபா நாங்கள் ஒவ்வொரு படத்தையும் விளக்கவுரை பெற அபுவிற்கு அனுப்புகிறோம், தாங்கள் அதை குமாரக்கா தீதி அவர்களிடம் கொடுத்து திருத்தம் செய்விக் கிறீர்கள். அதற்குப் பதிலாக குமாரக்கா தீதி அவர்களை மும்பைக்கு அனுப்பி வைக்க வேண்டினேன். இக்கடிதத்திற்கு தந்தி மூலமாக மறுநாள் காலை குமாரக்கா தாதி குஜராத் மெயிலி ல் வருவார் மும்பையில் வரவேற்றுக் கொள்ளுங்கள் என பாபா பதிலளித்தார். அது முதல் குமாரக்கா தாதி அவர்கள் எங்களுடன் 1969 வரை தங்கியிருந்தார். இவ்வாறாக மதிப்பிற் குரிய பிரகாஷ்மணி தாதி அவர்களுடைய அருகாமை மற்றும் தலைமை ஏறத்தாழ ஐந்து வருட காலம் எங்களுக்கு கிடைத்தது. தாதி நிர்மல் சாந்தா அவர்களை அன்பிற்குரிய பிரம்மா பாபா அவர்கள் கிழக்கு மண்டலத்திற்கு சேவையை துரிதப்படுத்து வதற்காக கொல்கத்தா விற்கு அனுப்பி வைத்தார்.

படவிளக்க கண்காட்சி மூலம் சேவை எவ்வாறு விரிவடைந்தது மற்றும் இந்த சேவையில் சகோதரர் நிர்வயர் மற்றும் மதிப்பு மிகுந்த சகோதர சகோதரிகளின் ஒத்துழைப்பு எவ்வாறெல்லாம் கிடைத்தது என்பதை மற்றொரு கட்டுரையில் எழுதுகிறேன்.

**கவலைப்படும் பேரரசன் ஓர் பிச்சைக்காரன்**
**கவலையில்லா பிச்சைக்காரன் பேரரசன் போன்றவன்,**
**ஏனென்றால் கவலை அமைதி மற்றும் மகிழ்ச்சியை கெடுத்து விடுகிறது.**

# ஆரோக்கிய வாழ்விற்கு இராஜயோக தியானம்

**பிகு. சுவாதி, சென்னை**



வெகு வேகமாக மாறிவரும் சமுதாய மாற்றத்தினாலும், வாழ்க்கைச் சூழலிலும் நாளுக்கு நாள் மனச்சோர்வு நோய், (Depression) மன பதட்ட நோய், (Anxiety Disorders) மனச்சிதைவு நோய், (Schizophrenia) எண்ண சுழற்சி நோய், (OCD - Obsessive Compulsive Disorder) தற்கொலை எண்ணங்களும், முயற்சியும் (Suicidal Thoughts and Attempts) சந்தேக நோய், (Paranoid Disoder) என்பவை மக்களிடையே அதிகமாக காணப்படுகிறது. இவையாவும் மனித சமுதாயத்தை பெருமளவில் பாதிப்ப தாகவும், பெரும் பிரச்சினையாகவும் உள்ளது.

உலக ஆரோக்கிய அமைப்பானது (WHO) ஒவ்வொரு வருடமும் 9 லட்சம் மக்கள் தற்கொலையில் இறப்பதாக அதாவது 40 நொடிக்கு ஒருவர் மரணம் அடைகிறார் என்ற விகிதத்தை கண்டறிந்து, குறிப்பிடுகிறது.

நவநாகரீக வாழ்க்கையின் அழுத்தத்தினால் பெரும்பாலும் தற்கொலை செய்துக் கொள்வது அதிகரித்துள்ளது மற்றும் இரட்டிப்பாகிக் கொண்டும் உள்ளது.

சீரிய உறவு முறையில் குறைப் பாடுகள், படிப்பில் தோல்வி, எதிர்பாராத வகையில் ஏற்படும் நஷ்டம், தன்னம்பிக் கையை இழத்தல், குற்ற உணர்வு இவையாவும் ஒருவரை மரணத்தின் எல்லைக்கு எளிதாக கொண்டு செல்கிறது. மேலும் அதிகளவிலான போதை பொருட்களை பயன்படுத்துதல், ஆயுதங்கள், உயர்ந்த கட்டிடங்கள் இவையாவும் கூட சுலபமாக உயிரை மாய்ப்பதாக உள்ளது.

ஐக்கிய நாட்டின் ஆரோக்கியம் மேலும் மனித சேவை துறையானது 90 சதவீத தற்கொலையானது மன அழுத்தத் தினால் மனச்சிதைவு நோயினாலும் மேலும் போதை பொருட்களை உட்கொள்வதாலும் ஏற்படுவதாக கணக்கிட்டுள்ளது. எனவே Prevention is better than cure என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவதுண்டு. அதாவது நோய் வந்தபின் குணப்படுத்து வதை விட வரும் முன் காப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது சாலச் சிறந்ததாகும்.

இன்றைய மனோதத்துவ வல்லுனர்களும், மன நல ஆலோசகர் களும் கூட போர்க்கால அடிப்படையில் சமுதாயத்தில் நிலவும் மிகப்பெரிய பிரச்சினையான மனநல பாதிப்பைக் களைய முயற்சித்து வருகிறார்கள். அது ஒருபுறம் இருப்பினும் கூட இராஜயோக தியானம் மிகவும் பயன் அளிக்கக்கூடியதாக உள்ளது. ஏனென்றால் இராஜயோக தியான முறையானது ஒருவரை பாழ்படுத்தும் செய்கைகளின் சுழற்சிக்கு (Habitual pattern) காரணமான எண்ணங்கள், உணர்வு மற்றும் பிரதிகிரியை (Reaction) போன்றவற்றி லிருந்து தொடர்பை துண்டித்து தனக்குள் மறைந்திருக்கும் நேர்மறை பண்புகளுடன் தொடர்பு கொள்ளச் செய்கிறது, மேலும் இது ஒருவருடைய கண்ணோட்டம், செயல்கள் மேலும் பரஸ்பரக்கிரியை (Inter-action) ஆகியவற்றை வலுப்படுத்துவதுடன் அழுத்தமான சூழ் நிலையை ஆரோக்கியமான மன நிலையுடன் கையாளும் தன்மையை அதிகரிக்கிறது.

யாரொருவர் இராஜயோக தியானத்தை பயிற்சி செய்கிறார்களோ அவர்களுக்குள் அக அமைதி மேலும் உள் ஆற்றல்கள் நிறைகிறது, இவையாவும் மகிழ்ச்சியை அனுபவம் செய்ய வைப்பதுடன் வெளிப்புற சூழலுக்கு அதிகம் சார்ந்திருப்பவராக இல்லாமல், தன்னை அதிலி

ருந்தாலும் தனித்திருக்க கற்றுத் தருகிறது. இதன் முடிவாக முந்தைய காலத்தைப் போல் அல்லாமல் எத்தகைய கடினமான சூழ்நிலை யிலும் கூட பாதிக்கப்படாமல் இருக்கச் செய்கிறது.

இத்தகைய மாற்றமானது அமைதி, அன்பு மேலும் இணக்கத்துடன் சூழ்நிலையை எதிர் கொள்ள கற்றுத் தருவதுடன் மாறாக மன அழுத்தம், குழப்பம் மற்றும் போராட்டமான நேரத்திலும் கூட திறம்பட கையாள கற்றுத் தருகிறது. இவ்வாறான நேர்மறை மாற்றம் படிப்படியாக மனச்சோர்விலிருந்து விடுப்படச் செய்வதுடன் எதிர்மறை பண்பு நலன்கள் மற்றும் எதிர்மறை உணர்வினால் தூண்டப்படும் தற்கொலை மனோபாவத்தையும் அகற்றி விடுகிறது.

நூற்றுக்கணக்கானவர்களும் மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் உலகம் முழுவதும் பிரம்மா குமாரிகள் இராஜயோக தியானத்தினால் பயன்பெற்றிருக்கிறார்கள். கடந்த 76 ஆண்டு களாக, இவ்வித்யாலயமானது 8500க்கு மேலான கிளைநிலையங்களுடன் 130 நாடுகளுக்கும் மேலான இடங்களில் செயல்பட்டு வருகிறது.

இராஜயோகத்தின் பயனால் பயன் அடைந்த பெற்றோர்கள், பாதுகாவலர்கள் மேலும் பல குடும்பங்கள் தங்களுடைய அன்பிற்குறி யோர்களை மன அழுத்தம், தற்கொலை முயற்சி செய்தவர்களை தியானப்பயிற்சி பெறச் செய்து அவர்களுடைய வாழ்க்கையிலும் மாற்றத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாது பல மருத்துவர்களும் கூட தங்களுடைய நோயாளி களை பிரம்மா குமாரிகள் தியான நிலையத்தை அணுக அறிவுறுத்து கிறார்கள்.

இக்கட்டுரையாளர் என்ற முறையில் இது எனது சொந்த அனுபவமும் கூட என்றும் கூறலாம்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் இராஜா சர் முத்தையா மருத்துவ கல்லூரியின் கீழ் இயங்கும் மருத்துவ மனையின் தற்போதைய மன நலப்பிரிவு துறை தலைவர் தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு தன்னுடைய குறிப்புச் சீட்டில் (Prescription) பிரம்மா குமாரிகள் கிளை நிலையத்தை அணுக அறிவுறுத்துகிறார் என அறிகிறோம்.

எனவே மருத்துவ ஆலோசனை களுடன், தியான வாழ்க்கை முறையும் இணைந்து ஒருவருக்கு சிறந்த பலனை அளிக்கிறது. அன்பு, அரவணைப்பு மேலும் போதிய ஒத்துழைப்பு கிடைக்காத காரணத்தினால் மன ஆரோக்கியம் பாதிக்கப்படுவதற்கு பதிலாக வாழ்க்கை யின் மறுபக்கத்தை உற்று நோக்கும் தன்மையை சமுதாயத்திற்கு பிரம்மா குமாரிகள் கற்றுத் தருகிறார்கள்.

எனவே இராஜயோக தியானம் சுய வல்லமைக்கு சிறந்த சாதனமாக இருப்பதுடன் இந்த எளிய முறையானது இறைவனுடன் தொடர்பை இணைப்ப தால் சுயத்தின் உண்மையான பண்புகளை மீண்டும் பெறச் செய்வதுடன் ஒருவருடைய எண்ணங்கள், உணர்வு, வார்த்தை மற்றும் செயல் ஆகிய வற்றின் மீது முழுமையாக சுய ஆளுமை கொள்ளச் செய்கிறது.

இவ்வாறான பெரும் மாற்றத்தினால் பிறரிடமிருந்து கவனமுடன் கேட்டல், பிறர் நலன் மீது அக்கறை கொள்வது என்பன போன்ற சமுதாய பண்புகளை வளர்ப்பதால் மகிழ்ச்சியாக வாழ்வதற்கான சுமூகமான சமுதாய சூழலையும் ஏற்படுத்துகிறது.

எனவே ஒவ்வொரு தனி நபரும் தனது மன நலனை காப்போம் எனில் சமுதாய மறுமலர்ச்சியையும் கொண்டு வர இயலும். (Emotional First Aid ) எனப்படும் உணர்ச்சி சம்பந்தப்பட்ட முதலுதவியை நம் கண்முன் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்க முன் வர வேண்டும்.

தனி மனித மாற்றமே சமுதாயம் மற்றும் உலக மாற்றத்திற்கு வழிகோலும் என்பதால் முதலில் ஒவ்வொரு தனி மனிதனும் தனது மன ஆரோக்கியத்திற்கு கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். ஆகையால் கீழ்கண்ட ஆரோக்கிய வாழ்விற்கான முக்கிய வழிமுறைகளை பின்பற்ற முயற்சிப்போம்.

(1) ஆரோக்கியம் தரும் உணவுகளை உட்கொள்வது, மனக்கிளர்ச்சியை தூண்டும் உணவுகளை தவிர்த்தல்.

(2) தினசரி உடற்பயற்சி செய்தல் / நடைபயிற்சி செய்தல்.

(3) சரியான தூக்கம் ஆரோக்கியம் மற்றும் நிம்மதியான வாழ்விற்கு இன்றியமையாதது. எனவே தூங்க செல்வதற்கு முன்பு 10-15 நிமிடம் தியான பயிற்சி செய்தல். இது அடுத்து வரும் நாளில் வல்லமையுடன் செயல்பட உதவுகிறது. மேலும் அன்றைய நிகழ்வுகளின் எதிர்மறையை அன்றே முடித்துவிடச் செய்கிறது.

(4) வாழ்க்கையின் ஆக்கப்பூர்வ திசையை மட்டுமே பார்ப்பது. இறுதியாக

(5) தனது அனைத்து சுமைகளையும் இறைவனிடம் ஒப்படைத்து விட்டு இறை துணையுடன் வாழ்க்கை பயணத்தை சுகமாக ஆக்கிக் கொள்ள முயற்சித்தல்.

மன நலம் காப்போம் ! மகிழ்ச்சியான சமுதாயத்தை மலரச் செய்வோம் !

# தேடல் முடிந்தது

*உடலின் தோற்றம் மற்றும் பெயரில் கவர்ச்சிக்கப்படுவோமேயானால், கடவுளிட மிருந்து தூரமாகி விடுவோம். இதன் காரணமாக கடவுளைத் தேடவேண்டிய அவசியம் உண்டாகி விட்டது. உதாரணமாக கூட்டத்தில் குழந்தை காணாமல் போய்விட்டால் தேடுகிறோமல்லவா, அதுபோல. இன்னொரு உதாரணம் காணாமல் போய்விட்ட குழந்தை அழுது கொண்டிருப்பதைப் பார்க்கும் ஒருவர் குழந்தையிடம் வந்து விசாரிக்கிறார். ஆறுதல் கூறுகிறார். திண்பண்டமோ, பொம்மையோ வாங்கித் தருகிறார் என்றாலும் குழந்தை அழுகையை நிறுத்தவில்லை ஏன்? குழந்தைக்கு அம்மா வேண்டும். சிலசமயம் நாம் கூட ஏன் அழுகிறோம்? வீடு இருக்கிறது. பெற்றோர் இருக்கிறார்கள். நல்ல குடும்பமும் உண்டு. இருந்தாலும் அழுகிறோம் என்றால் ஆத்மா தொலைந்து போய்விட்டது. ஆத்மாவுக்கு அம்மா வேண்டும், அப்பா வேண்டும்.*

*எப்போது அம்மாவும், அப்பாவுமாக இருக்கின்ற கடவுள் கிடைத்து விடுகிறாரோ அப்போது அழுகை நின்று விடும். தேடல் முடிந்து விடும். பக்தி செய்வது, பக்தி சம்மந்தமான புத்தகங்களைப் படிப்பது, தீர்த்தயாத்திரை செல்வது போன்ற செயல்கள் கடவுளைத் தேடும் முயற்சிகளாகும். எப்போது கடவுள் வந்து விடுகிறாரோ அப்போது தேடல் முடிந்து விடுகிறது. எப்படி அழுது கொண்டிருந்த குழந்தைக்கு ஏதேதோ பொருட்களை வாங்கிக் கொடுத்திருந்தாலும், அம்மாவைக் கண்டதும், தன்னிடம் வைத்திருந்த பொருட்களை யெல்லாம் வீசி எறிந்து விட்டு அம்மாவிடம் ஓடோடிச் சென்று கட்டிப் பிடித்துக் கொள்கிறதோ அதுபோல.*

*இப்படி காணாமல் போய்விட்ட அந்த ஒருவரையே நினைத்துக் கொண்டிருக்கும் ஒருவருடைய நிலைமையை நாம் புரிந்து கொள்கிறோம். ஓ கடவுளே! நீ எங்கே இருக்கிறாய்? உண்மையிலேயே நீ இருக்கிறாயா? உன்னை சந்திக்கின்ற அந்த நாள் எப்போது வரும்? இம்மாதிரி கடவுளைச் சந்திக்க வேண்டுமென்ற தணியாத தாகத்தோடு கடவுளைத் தேடிக் கொண்டே இருப்பவர்கள் இன்னும் அநேகர் இருக்கிறார்கள். எப்போது கடவுளை அடையாளம் கண்டு கொள்கிறார்களோ அது வரையிலும் தேடல் இருந்து கொண்டே தான் இருக்கும்.*


இராமா என்ற கன்னிகை கனவில் பட்டு பீதாம்பரம் அணிந்த கண்ணன் தன்னைப் புன்னகையுடன் சைகை காட்டி அழைப் பதாகக் கண்டாள். பிறகு...இதன் பிறகு...
வா என்னோடு விளையாடு!
ஒருமுறை அப்பெண் சத்சங்கத்திற்குச் சென்றாள்.
அடே! இந்த தெய்வீகமான வெள்ளுடை அணிந்தவர் யார்? இவரைத்தானே என் கனவில் நான் கண்டேன்!
அந்த கன்னிகை அன்று முதல் ஈஸ்வரிய சேவைக்காக சமர்ப்பணம் ஆனாள். இன்று இந்த வித்யாலயத்தின் முதன்மைப் பெண்ணாகவும் முதல் தலைவி யாகவும் இருந்து இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உள்ள நிலையங்களை நிர்வகித்து வருகிறார்.
பிரம்மா குமாரி ராஜயோகினி பிரகாஷ்மணி
ராதையும் தம் வாழ்க்கையை ஈஸ்வரிய சேவைக்காக சமர்ப்பணம் செய்தார். அவரே பிறகு ஓம்ராதே ஸ்ரீ சரஸ்வதி ஜகதம்பா எனப்பட்டார். யாகத்தை நடத்திக் கொண்டிருந்த ஆத்மாக்களுக்குத் தாயாக இருந்து அன்பு காட்டியும் அவர்களின் உயர்வுக்கு நிமித்தமாக இருந்தார்.
அதே சமயத்தில் மிகுந்த அழகும் நல்ல குணமும் நிறைந்த கண்ணிகையான ராதையும் ஓம் மண்டலிக்கு வரத் தொடங்கினாள். அவள் பாடுவதிலும் இசைப்பதிலும் நாட்டியமாடு வதிலும் தேர்ந்திருந்தாள்.
யார் நீ? உடல் அல்ல. உடல் பஞ்ச தத்துவத்தால் ஆனது. நீ ஓர் அழியாத ஆத்மா. ஈஸ்வரனின் குழந்தை.
எவ்வளவு தெய்வீகமான பேச்சு! சாந்தி தரும் பேச்சு.



மிக உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு கன்னிகை பாபாவின் வீட்டிற்கு வந்தாள்.
பாபா நான் மிகவும் துக்கத்தில் இருக்கிறேன். என் கணவர் இறந்து விட்டார்.
குழந்தாய்! யாருடைய கணவர் இறந்து போனார்? நீ ஓர் அழியாத ஆத்மா. உடலின் கணவர் தான் இறந்து போனார். தெரிந்ததா? ஆத்மாக்களின் கணவர் பரமாத்மா ஆவார். அவர் இறந்து போவாரா? நீ விதவை அல்ல.
பாபா! இப்போது என் துக்கம் நீங்கி விட்டது. நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். அப்பா... எவ்வளவு சந்தோஷம்.
அதைச் சொல்லிக் கொண்டே அவள் தியானத்தில் ஆழ்ந்துவிட்டாள்
அவள் தன் அப்பாவை பாபாவிடம் அனுப்பினாள். அவர் மிகவும் கோபக்காரர், குடிகாரர். ஓம் ராதை அவருக்கு ஞானத்தைக் கொடுத்தார்.
நீங்கள் யார் தெரியுமா? உங்கள் சரீரம் ஒரு கோவிலாகும். அதில் வசித்துக் கொண்டுள்ள நீங்கள் ஆத்மா. ஒரு தேவதை. தேவதைக்குப் படைப்பதற்கு மதுபானத்தைஎடுத்துச் செல்வார்களா?
என்ன? நான் தேவனா? அப்படியானால் நான் மது அருந்தக் கூடாதே!
வீட்டுக்கு வந்தவுடன் அவர் மதுபான சீசாக்களை வீசி எறியத் தொடங்கினார்
என் உயிரைக் குடிக்கும் எமன் எல்லோருக்குமே எமன் தான். அது உன்னையும் குடித்துவிடும்!
அடே பெரியண்ணா! நீங்கள் குடிக்காவிட்டால் பரவாயில்லை. எனக்குக் கொடுங்கள். நானாவது குடிக்கிறேன்.
அதன் பின் அக்கன்னிகையின் (இருதய புஷ்பா) பெற்றோர் தங்கள் உடல், மனம், செல்வம் அனைத்துடன் அனைவரும் சமர்ப்பணம் ஆயினர்.
ஒரு நாள் ஒரு சிறுமி தன் தாயுடன் ஓம் மண்டலிக்கு வந்தாள். பாபாவைப் பார்த்தவுடன் வேணுகானம் இசைக்கும் கண்ணனைக் கண்டாள்.
அதன்பிறகு அக்கன்னிகை (சாந்தாமணி)யும் தன் குடும்பத்தினரோடு ஓம் மண்டலியில் அர்ப்பணம் ஆனார். அவரோடு அவர்களுடைய உடல் மனம், பொருள் அனைத்தும் அர்ப்பணம் ஆயின.
பாபா கன்னிகைகளை தந்தையாக இருந்து அன்பு காட்டிப் பாதுகாத்து வந்தார். அவர்களிடம் தூய்மைக்கான சம்ஸ்காரங்களையும் உறுதிப்படுத்தி வந்தார்.
குழந்தாய்! கலியுகத்தின் நாகரிகம் நிறைந்த ஒருவனை மணக்க விருப்பமா? பட்டு பீதாம்பரம் அணிந்த சத்தியலோகக் கண்ணனை மணந்து கொள்ள விருப்பமா?
நாங்கள் அனைவரும் ஸ்ரீகிருஷ்ணனையே மணந்து கொள்வோம்.


சிந்து நாட்டின் ஹைதராபாத்தில் பாபா அனைவர்க்கும் தெய்வீகக் காட்சிகளைக் காட்டித்தருவதாகக் காற்றில் செய்தி பரவியது. செய்திப் பத்திரிகையிலும் வந்தது...
ஒரு பைசாவுக்கு ஐஸ்கீரிம் கிடைப்பது போல பாபாவின் சத்சங்கத்தில் நல்ல காட்சிகள் தெரிகின்றன.
கன்னியர்கள் கோபிகைகளைப் போல நடனமாடிக் கொண்டிருந்தனர்.
பாபாவின் லௌகீக மகளான நிர்மல் சாந்தா ஒருமுறை புகுந்த வீட்டிலிருந்து பிறந்த வீட்டிற்கு வந்தார். திரும்பி வீட்டிற்குப் போகும்போது...
பாபா நாளை எனக்குக் கார் அனுப்புங்கள்.
நாளை நடப்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.
பாபாவின் பேச்சைக் கேட்டு கோபித்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றார். பாதி இரவில் அவர் கனவில் பிரகாசமான பாபாவும் அவர் பின்னே ஸ்ரீ கிருஷ்ணனும் தெரிந்தனர்.
குழந்தாய்! எழுந்திரு. நீ ஒவ்வோர் ஆத்மாவின் ஜோதியையும் விளங்கச் செய்ய வேண்டும். உலகத்திற்கு நன்மை செய்ய வேண்டும்.
பாபா! தாங்கள் உண்மையில் பகவான் என்பதை நான் இத்தனை நாளாகத் தெரிந்து கொள்ளவில்லை. இனி நீங்கள் சொன்னதையே கேட்டு நடப்பேன்.
தமது குடும்பத்துடன் பாபா காஷ்மீருக்குச் சென்றார். அவருடைய மகள் ஒரு நாள் ஒரு வழிப்போக்கனைச் சந்தித்தார்.
குல்மார்க் செல்ல வேண்டும் அதற்கு எந்த வழி?
எனக்கு குல்மார்க் செல்லும் வழி பற்றித் தெரியாது. ஆனால் பரந்தாமத்திற்குச் செல்லும் வழி தெரியும்.
அந்த வழிப்போக்கனை பாபாவிடம் அழைத்துச் சென்றார். பாபாவைக் கண்டவுடன் அவர் (ரிஜூமல்) ஓர் ஒளியைக் கண்ட அனுபவத்தைப் பெற்றார்.
ஆகா! நான் பிறவிப் பயனைப் பெற்று விட்டேன்!
அதன் பிறகு ரிஜூமல் குடும்பத்துடன் இந்த யக்ஞத்திற்கு அர்ப்பணம் ஆனார்.


குழந்தைகளுக்காக பாபா ஓம் நிவாசத்தில் ஒரு தங்கும் விடுதியையும் பள்ளிக் கூடத்தையும் திறந்து வைத்தார். பள்ளிப்படிப்புடன் அவர்களுக்கு ஆத்மீக ஞானமும் சித்திரக்கலையும் சங்கீதக் கலையும் கற்பிக்கப்பட்டன.
யசோதா, ராமா, மோதில், லீலா போன்றவர்கள் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து அவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பினையும் ஏற்றனர்.
எந்த ஊருக்குப் போக வேண்டும்? எங்கிருந்து நான் இங்கு வந்தேன்? நின்று நின்று யோசிப்பது என்ன? ஒரே ஒரு சிறிய விஷயம் தெரியவில்லை. ஆத்மாவைப் பற்றியே தெரிந்து கொள்ளவில்லை.
பரமபிதா பரமாத்மா சிவபகாவன் அன்னையர்கள் மூலமாகவே அனைவர்க்கும் சக்கதி அளிக்க விரும்புகிறார் என்பதைச் சிந்திக்கலானார். அன்னையர்களின் ஒரு குழு அமைத்துத் தம்முடைய சொத்து அனைத்தையும் அவர்களுக்கு எழுதிக் கொடுத்து விட்டார்.
நான் எனது சொத்து முழுவதையும் அன்னையர்களான தங்களிடம் அதன் பாதுகாவலர்களாக ஆக்கி ஒப்படைக்கிறேன்.
பரமாத்மா சிவனுடைய அன்புக் கட்டளையை பாபா எடுத்து சொன்னார்.
குழந்தைகளே! நீங்கள் அனைவரும் தூய்மையாக வாழ்வோம் என்று உறுதி மொழி எடுக்கிறீர்களா?
ஆமாம் பாபா! நாங்கள் அனைவரும் தூய்மையினைக் காப்போம்
ஒவ்வொரு கன்னிகையும் அன்னையும் தங்களது வீட்டிலிருந்து அனுமதிக் கடிதம் வாங்கி வரவேண்டும் என்று பாபா சொன்னார்.
இதோ! நான் அனுமதிக் கடிதம் வாங்கி வந்துவிட்டேன்.
நான் என் மகளை ஓம் ராதையிடம் ஞானமிர்தத்தை அருந்துவதற்கும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கும் அனுமதி அளிக்கிறேன்.



**முகப்பேர்:** வைகுண்ட ஏகாதசி அன்று பிரம்மா குமாரிகள் இயக்கத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட சொர்க்க காட்சி



**முகப்பேர்:** வைகுண்ட ஏகாதசி அன்று ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சியில் பக்தர்கள் தங்களது பலவீனங்களை யக்ஞ குண்டத்தில் அர்ப்பணம் செய்கின்றனர்.



**ஊட்டி (கோத்தகிரி): இலவச தையல் பயிற்சியில்** (Tailoring Training) **கலந்து கொண்டவர்களுக்கு இராஜயோக தியான பயிற்சி அளிக்கப் பட்டது. பிரம்மா குமார் சகோதர சகோதரிகளுடன் பயிற்சியில் பங்கு கொண்டவர்கள்**



**திருவண்ணாமலை:** My India Healthy India நிகழ்ச்சியில் பி.கு. யோகி தனது அனுபவத்தை பகிர்ந்து கொள்கின்றார். மேடையில் டாக்டர் சித்ரா (துணை இயக்குநர், டாக்டர் சச்சின் பரப், டாக்டர் சுப்புராயன் சீனியர் சிவில் சர்ஜன், டாக்டர் ஏ. ரமேஷ், தலைவர், IMA பி.கு. கீதாலட்சுமி



**சிவகங்கை:** சீதாலட்சுமி நகர் கீதா பாடசாலையில் கொடியேற்றிய பின் உரை நிகழ்த்துகின்றார் பி.கு. விமலா



**மேட்டூர்:** காவல்துறையினருக்கான இராஜயோகா முகாமில் பயிற்சி அளித்த பின் பயிற்சியில் கலந்து கொண்டவர்களுடன் பி.கு. ஜானகி



**திருவாரூர்:** வேலுடையார் டீச்சர்ஸ் டிரெயினிங் சென்டரில் ஆசிரியர்களுக்கு மன இறுக்கம் பற்றிய உரையும், தியானப் பயிற்சியும் அளிப்பவர் பி.கு. தேவி மேடையில் திரு. விழிநாதன், திருமதி ஜெயந்தி மற்றும் திரு. அன்பழகன்



**மேட்டூர் அணை:** சிவபாபா கொடியேற்றும் விழாவில் முக்கிய விருந்தினர்கள் திரு. மது, தலைமை பொறியாளர் மேட்டூர் தெர்மல், பி.கு. ஜானகி மற்றும் பி.கு. தேன்மொழி



**திருவாரூர்:** கொரடாச்சேரி முகாமில் விளக்கேற்றி சிறப்பிக்கும் முக்கியஸ்தர்களுடன் பி.கு. தேவி



**ஊட்டி:** அமைதிக்காக நான் உறுதியளிக்கின்றேன் என்ற திட்டத்தில் உறுதி மொழி எடுக்கும் தாய்மார்கள்



**நாமக்கல்:** மாவட்ட ஆட்சியர் திரு. சகாயம் அவர்களுக்கு ராக்கி அணிவிப்பவர் பி.கு. ஜெயந்தி



**கடலூர்:** மாவட்ட செஷன்ஸ் நீதிபதி திரு. இராமபத்திரன் அவர்களுக்கு ராக்கி அணிவிப்பவர் பி.கு. சாரதா



**புரசைவாக்கம்:** திரு. தனபால், (M.A.B.L.) இந்து அறநிலையத்துறை, உதவி ஆணையர் (தலைமை அலுவலகம்) அவர்களுக்கு ராக்கி அணிவித்தபின் பி.கு. பாண்டி அபர்ணா



**நாகர்கோவில்:** மாவட்ட ஆட்சியர் பங்களாவில் நடந்த ரக்ஷா பந்தன் விழாவில் திரு. ராஜேந்திர ரத்னு IAS அவர்களுக்கும், அவர் குடும்பத்தினருக்கும் ராக்கி அணிவிப்பவர் சகோதரி பி.கு. மாலா



**ஆரணி:** திரு. சிவானந்தம், MLA அவர்களுக்கு ராக்கி அணிவிப்பவர் பி.கு.சரளாதேவி



**திருவாரூர்:** மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. T. R. பிரவீன் குமார் அபிநாப்பு அவர்களுக்கு ராக்கி அணிவிப்பவர் பி.கு. சகோதரிகள்.



**திருத்தணி:** திரு. கோ. அரி, MLA அவர்களுக்கு ராக்கி அணிவிப்பவர் பி.கு. சுசீலா உடன் பி.கு. சாய்ராம்




**மேட்டுப்பாளையம்:** ரக்ஷா பந்தன் விழா மேடையில் ஊராட்சி தலைவர் திரு. நந்தகுமார், நகராட்சி தலைவி திருமதி சத்யவதி, இன்னர்வீல் தலைவி ரொட்டரி திருமதி நளினி உரை நிகழ்த்துபவர் பி.கு. சொர்ணம்

*ஆன்மீக அழைப்பிதழ்*

# 5வது ஹிந்து ஆன்மீக மற்றும் சேவை கண்காட்சியில் 12 ஜோதிர்லிங்க தரிசன காட்சி

**பி. எஸ். உயர்நிலைப்பள்ளி மைதானம், மையிலாப்பூர் சென்னை-04**

**2013, பிப்ரவரி 11 முதல் 17 வரை**

**நேரம்: காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை**




ஆன்மீக சகோதர சகோதரிகளுக்கு வரும் 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 முதல் 17 வரை சென்னை பி.எஸ். உயர்நிலைப்பள்ளி மைதான த்தில் 5வது ஹிந்து ஆன்மீக சேவை கண்காட்சி சிறப்பாக நடைபெறவுள்ளது. ஹிந்து ஆன்மீக அமைப்புகளை ஒருங்கிணைந்து அவைகளைப் பற்றிய சரியான கண்ணோட்டத்தையும், சித்திரத்தையும் வரையும் பிரம்மாண்டமான முயற்சி, நம் நாட்டின் கலாச்சார, ஆன்மிகத்தின் தூதுவர்களாக இயங்கும் நம்முடைய ஆன்மீக சமய அமைப்புகளைப் பற்றிய சரியான கருத்தை அவர்கள் எவ்வளவு சேவை செய்கிறார்கள் என்கிற உண்மையை மக்கள் முன் வைக்கிறது ஹிந்து ஆன்மீக மற்றும் சேவை கண்காட்சி

இதில் 150க்கும் மேற்பட்ட ஹிந்து சேவை இயக்கங்கள் மக்களுக்கு தங்களுடைய சேவைகள் பற்றிய விழிப்புணர்வு அளிக்க பங்கு கொள்கின்றன பல இயக்கங்களின் சேவைகளை ஒரே இடத்தில் அறிவதற்கான ஓர் அரிய வாய்ப்பு. நம்முடைய அமைப்பும் வருடா வருடம் ஹிந்து ஆன்மீக மற்றும் சேவை கண்காட்சியில் பங்கு பெற்று மக்கள் இராஜயோக தியானம் மூலம் நம் வாழ்வை எப்படி வளப்படுத்தி கொள்ள முடியும் என்பதை வலியுறுத்தி வருகிறது. இந்த ஆண்டும் பங்கேற்கிறது.

இந்த ஆண்டு கண்காட்சியில் நம் இயக்கம் 12 ஜோதிர்லிங்க தரிசன காட்சி, இராஜயோக தியான கண்காட்சி, நற்பண்புகளின் மகத்துவம் மற்றும் பிரம்மா குமாரிகள் சேவைகளை விளக்கும் அரங்கம் ஆகியவற்றை அமைக்க உள்ளது. அனைத்து தரப்பட்ட மக்களும் இறைவனை உணர்ந்து இறை அருளை பெற்று வாழ்வை மேன்மையாக்கி கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்தும். இக் கண்காட்சியினை கண்டு பலன் பெற அன்புடன் அழைக்கிறோம்.

**பழைய நண்பர்கள் தங்கமானவர்கள் என்றால், புதிய நண்பர்கள் வைரம் போன்றவர்கள். உங்களுக்கு வைரம் கிடைத்து விட்டது என்று தங்கத்தை மறந்து விடாதீர்கள். ஏனெனில் வைரம் பதிப்பதற்குத் தங்கம் அவசியம்.**

# இராஜயோகத்தில் அஷ்டமா சித்திகள்

*டாக்டர் பி.கு. பாண்டியன்*



யோகம் என்பது தன்னை உணர வைத்து இறைவனோடு தொடர்பு கொள்ளச் செய்யும் ஒரு புனித கலையாகவே கருதப்பட்டு வந்துள்ளது. யோக சக்தி அடைந்தவர்களுக்கு உலகத்தில் மதிப்பு எப்போதும் இருந்து வருகிறது. அதற்கான காரணம் யோகத்தால் அமானுஷ்யகரமான (மனிதரால் செய்ய முடியாத) செயல்களும் நடைபெறுகின்றன என்பதேயாகும். ஆகாயத்தில் பறப்பதும், நீரில் மிதப்பதும், நெருப்பில் நடப்பதும் மற்றவர்களின் மனதில் நினைப்பதை தெரிந்து கொள்வதும் சகலவிதமான நோய்களை தீர்ப்பதும், இது போன்ற காரியங்கள் யோகிகளால் முடியும் என மக்கள் நம்புகின்றனர். தங்கள் அன்றாட பிரச்சனை களைத் தீர்த்துக் கொள்ள சித்தர்கள், யோகிகள் என்ற பெயர் வைத்துக் கொண்டிருப்பவர்களை நாடுகின்றனர்.

தற்காலத்தில் உண்மையான யோகிகளைத் தெரிந்து கொள்வது மிகவும் கஷ்டமான ஒன்றாகும். பொய் வேடம் தாங்கி தங்களை யோகிகள் என்று கூறிக் கொள்பவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது. இத்தகையவர்களை நம்பி பணத்தையும் பறிகொடுத்தவர்கள் ஏராளமானவர்கள்.

**உண்மையான யோகம் என்ன?**

யோகம் என்றாலே அஷ்டாங்க யோகம் தான் அனைவரின் எண்ணத்திற்கு வரும். யோகத் தந்தை பதஞ்சலி முனிவர் தான் யோகக் கலையை உலகத்திற்குத் தந்தார் என்றும் சொல்வார்கள் அவர் வகுத்தளித்த இயம, நியம, அசன, பிரணாயாம, பிரத்யாகார, தாரணை, யோக சமாதி எனப்படும் எட்டுவித அங்கங்களைக் கொண்ட அஷ்டாங்க யோகமாகும். இவைகளை முறையாகக் கற்பதே யோகக்கலை என்கிறார்கள்.

ஆனால் உண்மையான பாரதத்தின் பழமையான யோகம் தனிப்பட்ட பரமாத்மா சிவனால் கற்றுக் கொடுக்கப்பட்ட யோகமாகும். இந்த அரிய கலையாலே தான் மனிதன் தெய்வமாகிறார் என்பதும், மானுட சமுதாயம் தேவ சமுதாயமாக மாறியது என்பதும், நரகம் போன்ற உலகம் சொர்க்கமாக மாறுகிறது என்பதும் காலம் சொல்லும் உண்மையாகும். இத்தகைய யோகம் பரம் பொருளான இறைவனால் மட்டுமே கற்றுக் கொடுக்கப் பட்டது என்பது ரகசியமாகும். கலியுக கடைசித் தருணத்தில் புனித யுகமான சத்யுகத்தை படைப்பதற்காக இறைவன் கையாண்ட கல்விதான் இந்த இராஜயோகக் கல்வி முறை. உண்மையான யோகம் என்பது தன்னுடன் ஆத்மாக்கள் தொடர்பு வைத்துக் கொள்ள பரமாத்மா கொடுத்த அடையாள முகவரி யாகும். மற்ற யோகக் கலைகளில் இருந்து தனிப்பட்டதாகும். எவ்வாறு எனில் உடம்பை சரி செய்து, உயிர் நிலைக்கு செல்ல வேண்டும் என்று கூறுபவர்கள் யோகத்தின் ஒரு சாரார் இருக்கிறார்கள். ஆனால் இதுவரை அவர்கள் வெற்றியைக் காணவில்லை. ஏனெனில் உயிர் விளக்கம் பெற்று உயிரையும், உடலையும், உலகையும் சரி செய்ய வேண்டும் என்பதே இறைவனின் திட்டமாகும். இதற்காக அருளப் பட்டது தான் இராஜயோகம். (யோகங்களுக் கெல்லாம் தலை சிறந்த யோகம்) உடலால் செய்யும் யோகம் மானிட இனத்தில் இருக்கும் முனிவர்கள் கற்றுக் கொடுத்தது. உடலின் அநித்ய தன்மையை அவர்களின் யோகமும் கொண்டிருக்கிறது. ஆத்ம சக்திகளான மனம் புத்தியால் செய்யப்படும் யோகமே இறைவன் மனித இனத்திற்கு அருளிய இராஜயோகம். மனிதனை புனிதன் ஆக்குவது.

**யோகத்தால் பெறப்படும் சித்துக்கள்**

யோகத்தால் பெறப்டும் சக்திகளும், சித்திகளும் மனதின் ஏகாக்ரத் தன்மை யிலேயே நிகழ்கின்றன. இதன் மூலம் உடலையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம். இந்த யோகத்தால் ஆயுள் அதிகரிக் கின்றது. உடலை சரி செய்து வைத்துக் கொள்வதால் மட்டுமே யோக சக்திகளையும் சித்துக்களையும் பெற்று விட முடியாது. மனதை சரி செய்து அதை ஒருமைப்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதாலேயே சித்துக்கள் பெறப்படு கின்றன. **ஹடயோகத்தால் கிடைக்கும் சித்துக் களை அணிமா சித்துக்கள்** என்கிறார்கள். தான் விரும்பிய போது அணுப்பிரமாணமாக **தன் உடம்பை முறுக்கிக் கொள்ளுதல் இதை அணிமா என்கிறார்கள். தான் விரும்பிய போது தன்னை எவ்வளவு பெரியதாக்கிக் கொள்ள முடியுமோ அப்படி பெரிதாக்கிக் கொள்ளுதல் இதை மகிமா என்கிறார்கள். தான் விரும்பிய போது யாராலும் அசைக்க முடியா வண்ணம் கனத்ததாக்கிக் கொள்ளல் இதை கரிமா என்கிறார்கள். மிக எளிதாக பஞ்சு போன்று, புகை போன்று இலகுவாக்கிக் கொள்ளல் இதை லகிமா என்கிறார்கள். எண்ணிய வற்றை அடையும் ஆற்றல் பெற்ற சித்தியை பிராத்தி என்கிறார்கள். பிராகம்யம் என்றும், அண்டத்தில் உள்ள அனைத்து அசையும், அசையா பொருள்களின் மீதும் ஆதிக்கம் செலுத்தும் சக்தியைப் பெறுதலை ஈசித்துவம் என்பர். ஈர்ப்பு எனும் கவர்ச்சி சித்தி வசித்துவம், மனம் மற்றும் புலன்களை ஒருமைப் படுத்தி எண்ணிய எண்ணியாங்கு எய்துவது பிரசாரியம் என்று கூறுகிறார்கள்.** மேலே குறிப்பிட்ட சித்துக்கள் உள்ளதாகவும் அதை சித்த பெரு மக்கள் பெற்றிருந்தார்கள் என்றும் வழிவழியாக பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகிறது. இது வரை பலவிதமான அமானுஷ்யமான காரியங் களையும் யோகத்தினால் அவர்கள் பெற்றிருந்தார் கள் என்று நம்பப்பட்டு வந்துள்ளது

## இராஜயோகத்தில் சித்துக்கள்

ஹடயோகத்தில் பெறப்பட்டு வருவதாகக் கூறப்படும் சித்துக்களைப் பற்றி கேள்விப் பட்டுள்ளோம். ஆனால் நேரடியாக கண்ட தில்லை. ஆனால் உண்மையில் பார்க்கப் போனால் மேலே குறிப்பிட்டிருக்கும் சித்துக்கள் அனைத்தும் இராஜயோகிளால் பெறப்பட்ட வைகள் தான். இராஜயோகக் கல்வியில் நாமனைவரும் அணுப்பிரமாண மான ஒளிப்புள்ளிகள். யோகம் செய்யும் போது முதலாவதாக தன்னை அழிவற்ற ஒளிப் புள்ளியாக புரிந்து கொண்டு அதை அடை தலாகும். தன்னையும் பிறரையும் ஒளி அணுக்களாக புரிந்துக் கொண்டு உணர்தல் இராஜயோகத்தின் முதல் பாடமாகும். இந்த பாடத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் அனிமா சித்துவை கைவரப் பெற்றவர்களாவார்கள். இராஜயோகத்தின் இரண்டாவது நிலையான உச்சிக்கு மேல் செல்லுதல், சூரியன், சந்திரன், நட்சத்திர மண்டலங்களையும் கடந்து சூட்சும உலகையும் தாண்டி தன்னைப் பெருக்கிக் கொள்ளல், அதையும் தாண்டி பரந்தாமம் எனப்படும் இறைவன் உறையும் இடத்தை அடைதல், இதுவே தன் உணர்வைப் பெருக்கிக் கொள்ளும் மகிமா சித்தியாகும். உண்மையாக தன் உணர்வினை எவ்வளவு முடியுமோ அவ்வளவு பெருக்கிக் கொண்டு செயல்படுதல் எங்கு என் மனம் உள்ளதோ அங்கு நானிருக் கிறேன் என்ற தத்துவத்தை அடிப்படையாக கொண்டிருப்பது தான். ஆத்மா தந்தை பரமாத்மா, நடப்பவையாவும் நாடகப்படியே நடக்கிறது என்ற மூன்று விஷயங்களில் இராஜயோகி கொண்டிருக் கும் அசைக்க முடியாத நம்பிக்கை இதைப் பெற்றவர்கள் கரிமா சித்து கைவரப் பெற்றவர்கள் ஆவார்கள் என்றும், இலேசாக இருப்பவர்கள் இலகிமா என்ற சித்தைப் பெற்றவர்கள், முக்காலமும் உணர்ந்து எண்ணத்தால் தான் விரும்பும் இடங்களுக்குச் சென்று வருபவர்கள் பிராத்தி எனப்படும் சித்தைக் கைவரப் பெற்றவர்கள். இராஜயோகம் செய்கின்ற போது எண்ணியவற்றை எல்லாம் அடைகின்ற ஆற்றல் வந்து விடுகின்றது.

இதையே பிராகமியம் எனப்படும் சித்தை அவர்கள் அடைகிறார்கள் என்று அர்த்தமாகும். இந்த பேரண்டத்தில் உயிருள்ளவைகள் மற்றும் உயிரற்றவைகள் மீது செலுத்தப்படும் ஆதிக்கம் ஈசித்துவம். யோகம் சரியான வகையில் செய்கின்ற போது ஆன்மாவில் உருவாகும் காந்த மண்டலத்தின் சுவாசத்தன்மை வசித்துவம். இவ்வாறு பரமாத்மா கற்றுக் கொடுத்திருக்கும் இராஜயோகத் தால் அத்துணை சித்துக்களையும் நம்மையறி யாமலேயே நாம் பெற்றுவிடுகின்றோம்.

### இராஜயோகத்தில் மனிதகுல சேவை

தற்சமயம் கலியுகத்தின் கடைசி நேரம் நடந்து வருகின்றது. எங்கு பார்த்தாலும் துக்கமும் துயரமும், அமைதியற்ற தன்மையும் காணப்படு கின்றன. மக்கள் பல்வேறு விதமான பிரச்சனைகளால் சூழப்பட்டு, கஷ்டப்பட்டு வருகின்றனர். அவர்களின் துயரங்களைப் போக்கி மன அமைதி நல்குவது இராஜயோகி களின் முக்கிய கடமையாகும். அவர்களால் செய்யப்பட்ட சேவைகளை மனித வர்க்கம் இன்று வரையிலும் நினைத்து விழாக்களாக கொண்டாடி வருகின்றனர். இவைகள் அனைத்தும் இராஜயோகத்தின் சக்திகள் ஆகும். யோகத்தை தனக்காகவும் பிறருக்காகவும் பயன்படுத்தும் வல்லமை பெற்ற சித்தியாளர்கள் இராஜயோகிகள். எவ்வாறு துவாபர யுகத்தில் பக்தியின் பாவனையின் பலனை பரமாத்மா கொடுத்து வந்தாரோ அதற்காக பரமாத்மா தந்தைக்கு சிறு கிராமங்களிலும் பெரு நகரங் களிலும் கோயில் கட்டி தன் நன்றிக் கடனை பக்தர்கள் செலுத்தி வருகின்றனர். அவ்வாறே பரமாத்மாவின் குழந்தைகளான இராஜயோகி கள் அவர்களின் யோக சக்திகள் மூலமாக உலக மக்களின் பல்வேறு கஷ்டங்களை களைந்து அவர்களுக்கு சுகம் தந்தனர். அவர்களின் இந்த சேவைக்கான நன்றி யறி தலைக் காட்ட சக்தி களுக்கான கோயில்களைக் கட்டியிருப்பதை காணலாம்.

### தன்நிலை உணர்தலே அனுபவ நிலையாகும்

மகாவீர அனுமனுக்கு, தன் உயர்ந்த தன்மைகளை உணர்த்தினார்கள். அதன் பயனாக கொடிய அரக்கனான இராவணபுரி தீக்கிரை யானது. சஞ்சீவி மூலிகை கொண்டு வரப்பட்டு உயிரற்று மயங்கிக் கிடந்தவர்கள் உயிர் வரப் பெற்றனர். பல்வேறு விதமான அதிசயங்களையும் அற்புதங்களையும் மகாவீர அனுமன் நிகழ்த்திக் காட்டினார். அதைப் போன்றே பரமாத்மா சிவன் ஆதிசனாதன தேவி தேவதா வம்சாவளியைச் சார்ந்த மகாவீரக் குழந்தைகளான நமக்கு நம்முடைய சுவமானங்களை உயர்ந்த வல்லமை களை பரமாத்மா சிவன் எடுத்துக் கூறியுள்ளார். அவைகளை உள்ளப்பூர்வமாக உணர்வுபூர்வமாக உணர்ந்தால் மகாவீரர் களாகலாம். மகாவீர அனுமன் எவ்வாறு அணிமா சித்துகள் அனைத்தையும் பயன்படுத்தி ஒரு சேவகனாக இருந்து இராம காரியத்தை வெற்றி பெறச் செய்தாரோ, அதைப் போல நாமும் இறைத் தொண்டர்களாகி நவயுகப் படைப்பாகிய சிவராமனின் காரியத்தை முடித்து வெற்றி பெறலாம். தன்னிலை உணர்தலே இப்போது தேவைப்படும் ஒன்றாகும். இராஜயோகிகள் மிகப் பெரிய அறிவியலார்கள். ஆன்மீக வாதிகள் முக்கால இரகசியங்களை தெரிந்து கொண்டவர் கள், மன வலிமை பெற்றவர்கள். அதனால் மூன்று உலகங்களுக்கும் சென்று வருபவர்கள். இவைகளை எல்லாம் உணர்ந்து அனுபவ நிலையைப் பெற வேண்டிய தருணம் இத் தருணமாகும். திருவிளையாடல் புராணத்தில் சிவனின் சித்தாடல் காட்டப்பட்டுள்ளன. அதைப் போலவே சிவமைந்தர்களான இராஜயோ கிகளின் சித்தாடல்களை உலகம் தற்போது கண்டு வருகின்றது.

### இராஜயோகத்தினால் பெறப்படும் சித்திகளின் வகைகள்

இராஜயோகத்திற்கு அடிப்படையாக கருதப்படுவது பரமாத்மா சிவன் அருளிய

ஞானமாகும். சித்த ஞானம் பிரம்மாவின் உடலில் பரகாய பிரவேசம் எனப்படும். மா பெரும் சித்தியின் மூலம் ஆத்மாக்களின் உன்னதிக்காக (முன்னேற்றம்) 1936ம் ஆண்டு ஞான தந்தை சொரூபம் நிஜாநந்த சொருபம் சுயம் பிரகாஷ வடிவினரும் ஆகிய ஜோதி பரம் பொருளாம் பரமாத்மா சிவன் அருளியதாகும் இந்த ஞானத்தைப் பெற்றவர்கள் சிவஞான சித்தி பெற்றவர்கள். இராஜயோகத்தை கற்று அனுபவம் பெற்று வருபவர்கள் சிவ யோக சித்தி பெற்றவர்கள் ஞான சித்தியும் யோக சித்தியும் அடைந்தவர்கள் காரிய சித்தியை அடைகிறார்கள் அவர்கள் எடுத்த காரியங்களில் வெற்றியை அடைகிறார்கள். இதற்கு பல நிதர்சன உதாரணங்கள் உள்ளன. மேலும் யோகத்தில் அவர்களுக்கு சிவானுபவ சித்தி கிடைக்கின்றது மன்மானபவ எனப்படும் மூலமந்திர அனுபவ சித்தியும் இந்திரியங்களை அடக்கியாளும் கர்மேந்திரிய, ஞானேந்திரிய சித்திகளும் காலத்தை கணக்கிடும் கால சித்தியும் அவர்களிடம் வந்தடைகின்றது. இத்துணை சித்திகளையும் சங்கமயுக பிராமணர்கள் கையாள தன்னை முற்றும் சிவனிடம் அடைக்கலமாக தந்துவிட வேண்டும். பூரண சரணாகதி தான் இச்சித்தி களின் திறவுகோல் என் செயல் ஆவது யாதென்றும் இல்லை அனைததும் என் தந்தை சிவன் செயலே என உணர்வு பூர்வமாக உணர்தல் வேண்டும் என் தந்தை பாபா என ஆழ் மனதில் அக நாதம் ஒலிக்க வேண்டும் எனக்கிருப்பது சிவத் தந்தையே அன்றி வேறு யாரும் இல்லை என்பவர்களுக்கு அருட் தந்தையின் அருட் சித்தி கிடைக்கின்றது. இவ்வாறு பல்வேறு வகைப்பட்ட சித்திகள் இந்த சங்கமயுகத்தில் பிரம்மா குமாரிகளுக்கும் பிரம்மா குமாரர்களுக்கும் கிடைக்கின்றது.

**பிரார்த்தனை என்பது கார்களில் உபரியாக வைக்கப்பட்டிருக்கும்** (Stepney) **சக்கரம் அல்ல. கார் செல்ல வேண்டிய திசையில் செலுத்த உதவும்** (Steering Wheel) **சுழற் சாதனம்.**

**மோட்டார் கார்களில் பாதுகாப்பாகப் பொருத்தப்பட்டிருக்கும் காற்றுத் தடுப்புக் கண்ணாடிகளின் அளவு பெரிது. ஆனால் பின்புறத்தைப் பிரதி பலிக்கும் கண்ணாடியின் அளவு மிகச் சிறிது. அதாவது வருங்காலத்தைப் போன்று, கடந்த காலம் அவ்வளவு முக்கியமானதல்ல. ஆதலால் முன்னேறிச் சென்று கொண்டேயிருங்கள்.**

**நட்பு என்பது ஒரு புத்தகம் போன்றது. இதை சில நொடிகளில் எரித்துவிட முடியும். ஆனால் இதைப்படைப்பதற்குப் பல ஆண்டுகள் ஆகும்.**

**வாழ்க்கையில் எல்லாமே நிரந்தரமானதல்ல. பிடித்தமாக இருந்தால் அனுபவம் செய்யுங்கள். நன்றாக இல்லையா? கவலைப்படாதீர்கள். இதுவும் நிரந்தமானதல்ல.**

## சங்கமயுகம் இதழ் பற்றிய முக்கிய அறிவிப்பு

2011-2012 ஆண்டில் இந்த இதழ் 5வது இதழ். அடுத்த இதழ் இந்த ஆண்டின் கடைசி இதழாகும். அடுத்த ஆண்டு முதல் **(2013-2014)ல் தனிப்பிரதி விலை ரூ.8/-** ஆகவும், ஆண்டு சந்தா (அஞ்சல் வழி) ரூ.60/- ஆகவும் உயர்த்தப்படுகிறது. ஆதலால் **ஆண்டு சந்தா** அனுப்புபவர்கள் **ரூ.60/-** மணியார்டர் மூலம் ஜனவரி 2013 முதல் அனுப்பலாம். **DD** மூலமாக அனுப்பும் சென்டர்கள் வழக்கம் போல் **"SANGAMAYUGAM"** என்ற பெயரில் எடுத்து சாந்திதாம் முகவரிக்கு அனுப்பவும். **DD** அனுப்பும் போது கடிதத்தில் தயவு செய்து சங்கமயுகம் இதழுக்காக என்று குறிப்பிடவும், மணியார்டர் மூலம் பணம் அனுப்பும் தனி நபரும், சங்கமயுகம் என்று மணியார்டர் படிவத்தின் கீழ் பகுதியில் குறிப்பிடவும். நன்றி

# ஆதி தேவ் பிரம்மாவும், ஓம் மண்டலியும்



**ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.** மனிதன் ஏற்றுக் கொண்டு அதன் படி வாழ வேண்டும் என்ற உறுதியும், குறிக் கோளும் இவ்வாசகத் தின் உயிரோட்டமாக இருக்கிறது. ஆனால் நடைமுறை என்று வரும்போது இதில் எத்தனை சிக்கல்கள்! மனித வரலாற்றைப் பார்க்கும்போது மனிதன் வாழ்க்கைப் பாதையில் தடம் புரளும் போதெல்லாம் மக்களுக்கு வழிகாட்டு வதற்காக கடவுளின் தூதுவர்கள் கீழிறங்கி வந்தனர், எனினும் இவர்களுக்குக் கிடைத்த வெகு மதிதான் என்ன? சுயநலமும், ஆணவமும் கொண்ட சிலர் இவர்களை மிருகங்களையும் விட கேவலமாகக் கொடுமைப்படுத்தியது எவ்வளவு வேதனைக்குரியது! இத்தகைய பாவச் செயல்கள் பிரதிபலிக்காமல் இருக்குமா? வாழ்க்கையில் துன்பங்களும், இயற்கையால் பாதிப்புகளும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

பிரம்மா பாபாவின் ஆன்மீக வாழ்க்கை வரலாறும் இத்தகையது தான். பாபாவின் ஞானம், மனிதனை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த ஆணவத்திற்குச் சவாலாக இருந்தது. மனிதன் சரீரப்பற்றிலிருந்து விலகி, தான் ஒரு தனிப்பட்ட சத்தியமான அழிவற்ற ஆத்மா என்ற உண்மையை உணர்வது இன்றியமையாதது என்று உணர்த்தினார். காமம் எனும் சரீர இச்சை குற்றமுள்ளது. உலகளவில் மனிதனின் வீழ்ச்சிக்கு அடிப்படையான காரணம் இது தான் என்று தெளிவுபடக் கூறினார். தனது குழந்தை கள் (உலக முழுவதிலுமுள்ள ஆத்மாக்கள்) அனைவரும் தங்களுடைய தெய்வீக நிலைக்குத் திரும்ப வேண்டும் என்பது இறைவனின் கட்டளை. இது பஞ்ச விகாரங்கள் எனும் சைத்தானுக்கு இறைவன் (பரமாத்மா) விடுக்கின்ற இறுதிச் சவாலாகும். ஆதலால் சுய பலவீனம் எனும் சைத்தானும் தனது சாமர்த்தியம் முழுவதையும் காட்டுவது என்ற முடிவான போராட்டத்தைத் தீவிர மாக்கியது. இவ்வாறாக அதர்மத்தின் மீதான, தர்மயுத்தம் ஆரம்பமாகி விட்டது எனலாம்.

மேலும் நல்லொழுக்க சீலம் பற்றி போதித்தமைக்காக, சொல்லொணாத் துயரத்திற் குள்ளான இந்திய மகான்களின் வரிசை மிக நீளமானது. என்பது அறிந்த ஒன்று தான். குறிப்பாக பக்த மீரா விஷம் அருந்த வேண்டிய தாயிற்று. சத்தியம், அஹிம்சையை மூலதனமாக வைத்து எளிமையாக வாழ்ந்து, இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்த காந்தி மகான் சுடப்பட்டது சமீப காலத்தில் தானே! துப்பாக்கி ரவைகள் என்ன செய்யும்? இயக்கியவன் உயிரோட்டமுள்ள மனிதனல்லவா?

மனிதனை நல்வழிப்படுத்துவதற் காகக் குரலெழுப்பும் எவரும், எதற்கும் எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்பது தான் விதிபோலும். பிரம்மா பாபா இறைவன் கட்டளையை சிரமேற்கொண்டு ஓம் மண்டலி எனும் ஆன்மீக ஆரம்பப் பள்ளியை நடத்தி வந்த நேரம். எத்தனையோ நன்மைகள் செய் திருப்பினும், அதை எளிதில் மறந்து விடும் மனித சமுதாயம், பொய்யான வதந்திகளைப் பரப்புவதும், அதை மலைபோலாக்கத் தயங்காததும் விந்தை யிலும் விந்தை. தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் சுயநலக்காரர்கள், நாக் கூசாமல், சாதுரியமாக ஓம் மண்டலியைப் பற்றி இல்லாததும், பொல்லாத துமான பொய்களை மக்கள் மத்தியிலே பரப்பி, அனாவசியமான ஆக்கிரமிப்பை பாபா மீது கொண்டு வந்தனர். இதற்கெல்லாம் பாபா

ஒன்றும் மசியவில்லை. கோபப்பட வுமில்லை. எதிர்த்துப் போராடவும் இல்லை. வழக்கம்போல் சிவபாபாவின் அருள் மொழிகளும், ஆன்மீகப் பயிற்சியும், கல்வியும் தொடர்ந்து நடந்து கொண்டேயிருந்தன. சிவபாபா அனு தினமும் அருள் வாக்கினை அளித்து குழந்தைகளை மகிழ்ச்சியூட்டி வந்தார். இத்தருணத்தில் ஜெகதம்பா சரஸ்வதி பாபாவுக்கு துணையாக உறுதியாக நின்று பாடங்களை நடத்தி வந்தார்.

இதையெல்லாம் கவனித்துவந்த சிந்து ஹைதராபாத் பொது மக்கள் பாபாவிட மிருந்து பலத்த எதிர்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஆனால் அவர்கள் ஏமாற்றமே அடைந்தனர். இப்பள்ளியை நடத்துவது யார்? சிவபாபா. பிரம்மா பாபா அல்ல என்பதை அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. பிரம்மா பாபா ஒரு உயர்ந்த படிப்பாளியோ, குருவோ அல்ல. இப்போது இப்படி ஆகியிருப்பதாகவும் அவர் கருதவில்லை. பிரம்மச்சரியம் மற்றும் மனம், சொல் செயலில் தூய்மை எனும் கல்வி அவர் மனதில் எழுந்த ஒன்றல்ல. உண்மையில் இதைப்பற்றிக் கேட்டதும், முதலில் ஆச்சரியத் திற்குள்ளானது இவர் தான்.

பொதுவாக சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ள குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டுள்ள ஆணும், பெண்ணும் பிரம்மச்சரியத்தைக் கடைப் பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியுமா? இது கேள்விப்படாத ஒன்று. அப்படி இத்தகைய வழியைப் பின்பற்ற விரும்பியவர்கள் வீட்டைத் துறந்து, காட்டில் மலைக்குகைகளில் வாழச் சென்று விட்டனர். ஆணும், பெண்ணும் ஒன்றாகவே இருந்து, காம இச்சையைத் துறந்து தூய்மையாக வாழ முடியும் என்பது நம்பக் கூடியதா? அக்காலத்தில் தாதா லேக்ராஜ் (பிரம்மா பாபா) உட்பட யாரும் கற்பனை செய்து கூடப் பார்க்கத் தயாராயில்லை. ஏனெனில் இது தெய்வீக சக்தியாலன்றி சாத்தியமானதல்ல என்பது அனைவருடைய கருத்தாக இருந்தது. ஆனால் இன்றைய நிலை வேறு. இது முற்றிலும் சாத்தியமானதே என்பது நிரூபணமாகி விட்டது. தம்பதிகளாகயிருக்கும் பலர் தியானத்தின் மூலம் கடவுளிடமிருந்து சக்தியைப் பெற்று நம்பிக்கை யுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். இதை அங்குள்ள பொது மக்கள் அறியவில்லை. கடவுளே (சிவபரமாத்மா) இவர் களுக்குத் துணையாக இருக்கின்றார். இதுவே கடைசிப் பிறவியும், கடைசிப் போராட்டமுமாகும். இப்போராட்டத்தின் முடிவில் வெற்றியும், இதன் ஆதாரத்தில் இப்பூமியில் சொர்க்கம் அமைவதும் உறுதி.

இது இவ்வாறிருக்க, சில குடும்பங்களில் தூய்மையான வாழ்வுக் கெதிராக குழந்தைகள் துன்புறுத்தப் பட்டார்கள். எத்தனை எதிர்ப்புகள், அவதூறுகள், கொடுமைகள் தொடர்ந் தாலும், பெண்கள் தாங்கள் எடுத்துக் கொண்ட உறுதி மொழியில் திடமாக இருந்தனர். இது பொது மக்களுக்குப் பெரிதும் வியப்பாக இருந்தது. காரணம் இயல்பாகவே பெண்கள் கணவன் அல்லது தந்தை சொல் மீறாதவர்கள். ஆண்கள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கத் தயங்குபவர்கள். ஆண்கள் இருக்குமிடத்தில் அடங்கி இருந்தவர்கள். கூண்டில் அடைபட்ட பறவைகள் போல சுதந்திரமின்றி வாழக் கற்றுக் கொண்டவர் கள். அப்படிப் பட்டவர்கள், ஆண்களை எதிர்த்து உறுதியாகப் போராடியது மிக விநோதம். எத்தனை தெய்வீக சக்தி பெற்றிருந்தால் இது சாத்தியமாகும் என்று எண்ணி வியந்தனர். இப்பெண்கள் குருவைக் காட்டிலும், ஞானக் கருத்துக்களை மிகத் தெளிவாகவும், எளிதாகவும், கேள்விக்குப் பதிலாக முன் வைத்தார்கள். குடும்பத்தில் மற்றவர்களுடைய ஏளனம், வசை, உதை, பட்டினி எதையும் தாங்கிக் கொண்டார்கள். இவ்வாறு எள்ளளவும் தங்கள் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் தங்கள் அலுவல்களைச் செய்து வந்தார்கள். தவறாது ஓம் மண்டலிக்கும் சென்று வந்து கொண்டிருந்தார்கள்.

வெளியிலுள்ள மக்கள் பாபாவைத் தங்கள்

இரு கண்களால் மட்டுமே பார்த்தனர். அவர்களது அறிவு எனும் மூன்றாம் கண் மூடியே இருந்தது. ஆன்மீகத் தந்தை சிவபரமாத்மா, பிரம்மாவின் சரீரத்தில் பிரவேசித்து சத்தியமான மிக ஆழமான ஞானத்தை அருளுகின்றார் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவ் வாறாக உளுத்துப்போன பழைய நம்பிக்கை களிலேயே ஊறிப்போன மக்கள் ஒன்றுக்கும் உதவாக்கரைகளாக ஒதுங்கியே இருந்து விட்டனர். பிரம்மா பாபாவும் அமைதியாகவே இருந்து விட்டார். ஏனெனில் அவர் சிவ பரமாத்மாவின் பிடியிலிருந்தார். தன் வழியே போய்க்கொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவனை, இன்னொருவன் இடையில் வழிமறித்துப் பிடித்துக் கொண்டதைப் போல நான் இருக்கிறேன் என்று பிரம்மா பாபா கூறினார்.

இதற்கிடையில் ஓம் மண்டலி எதிர்ப் பாளர்கள் தங்கள் எதிர்ப்பை தீவிரப்படுத்தினர். குண்டர்களை நியமித்து சத்சங்கம் செல்பவர் களைக் கண்காணித்தனர். சிலரை வழிமறித்து பயமுறுத்தினர். இச்செயல் பிரம்மா பாபாவின் செவிக்கு எட்டியது. எனினும் அவர் இதைப் பற்றிக் கவலைப்படவில்லை. இவர்கள் சிவபரமாத்மாவை இன்னும் அறிந்து கொள்ள வில்லை. ஆதலால் தான் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்று சாந்தமாகவே கூறலானார். நான் தான் இதையெல்லாம் செய்கிறேன் என்று தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நான் கடவுளால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறேன் என்பதை இவர்கள் அறியாதிருக்கின்ற காரணத்தால் எதிர்க்கிறார்கள் என்றார். கடவுளுக்கு சரீரமில்லை. ஆதலால் எனது சரீரத்தை உபயோகித்து நல்வழி நடத்துகின்றார். இவர்கள் என் சரீரத்தையே பார்க்கிறார்கள். இந்த சரீரத்திலுள்ள சிவபரமாத்மாவை இவர்களால் பார்க்க முடியவில்லை. பாவம். இவர்களைச் சொல்லி குற்றமில்லை. உண்மையில் குற்றம் சாஸ்திரத்தினுடையது தான். சாஸ்திரத்தில் கடவுளைப்பற்றிய கற்பனைக் கதைகள் தவறான அபிப்பி ராயத்தை உண்டாக்கி யிருக்கின்றன. உதாரணமாக, பிரம்மாவை சரஸ்வதி மயக்கிய தாகவும், சங்கர் மோகினியைக் காப்பாற்றியதும், அவர் மீது மையல் கொண்டதாகவும், கிருஷ்ணர் கோபியர்களின் ஆடைகளைத் திருடிச் சென்றதாகவும் எழுதப்பட்டுள்ளன. கதைகளின் உண்மை தாத்பரியத்தை அறியாமல் பரம்பரையாகவே காதல், காமம் இருந்துவரு வதாக மக்கள் தவறாகப் புரிந்து கொண்டு விட்டனர். சாஸ்திர சிரோண்மணியான ஸ்ரீமத் பகவத் கீதையில் காமம் மகா சத்ரு என்று கூறப்பட்டுள்ளது. ஏனோ! பண்டிதர்களும், பிற பிரச்சாரகர்களும் மக்கள் மத்தியில் இதை வலி யுறுத்தாமல் புறக்கணித்து விட்டார்கள். இருப்பினும் இதைப்புரிந்து கொண்ட சிலர் வீட்டை விட்டுக் காட்டிற்குச் சென்று தவம் செய்ய ஆரம்பித்தனர். கிறித்தவர்களும் காமமே முதல் பாவம் என்று கூறுகின்றனர். கிறித்துவ மதகுருமார்கள் பிரம்மச்சரியத்தைக் கடைப் பிடிக்கிறார்கள். பௌத்த மதத்தினரும், புத்த பிக்ஷுக்கள் என்று அழைக்கப்பட்டது துறவறம் பூண்டதன் காரணமாகத்தான். யூதர்களும் கூட இவ்விஷயத்தில் கட்டுப்பாடுடன் வாழ வேண்டும் என்றே கருதினர். இவ்வாறாக உலகமே தூய்மையின் அவசியத்தை மதிப்பை உணர்ந்திருந்தாலும், நடை முறையில் கடைப் பிடிக்க முடியாத அளவுக்கு பலவீனமாகி விட்டார்கள். எனவே உண்மையைக் கண்டு அஞ்சுகின்றனர். தங்கள் தவறான வாழ்க்கைப் பழக்கங்களுக்கு சமாதானம் கூறி தூய்மையாக வாழ விரும்பியவர் களையும் விலக்கி வைக்கவும் முற்பட்டனர்.

ஓம் மண்டலிக்கு எதிரான சூழ்ச்சிகளும், அவதூறுகளும் அங்கு படித்துக் கொண்டிருந்த குழந்தை களுக்கும், அங்கு சென்று வந்து கொண்டிருந்த பெண்களுக்கும் ஒரு சோதனை யாக இருந்தாலும், தற்போதும் எதிர்காலத்திலும் இத்தகைய சூழ்நிலை களை எதிர்கொள்ளும் துணிச் சலையும் மன உறுதியையும் பெற்று

வந்தனர். சத்சங்கத்திற்குச் செல்ல விரும்பிய பெண்களின் துயரமும், வேதனையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே யிருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் சில பெற்றோர்கள் தாங்கள் செல்லமாகப் பெற்று வளர்த்த குழந்தைகள் சத்சங்கம் செல்லக்கூடாது என்று வற்புறுத்தப் பட்டார்கள். சில குழந்தைகளை படுக்கையிலேயே கட்டிப்போட்டும், பட்டினி போட்டும், பல நாட்கள் சித்திரவதையும் செய்தார்கள் என்பது இவர்களின் பெற்றோர் எந்த அளவுக்கு மதிகெட்டு, தரங்கெட்டுப் போயிருந்தனர் என்பதையே காட்டுகிறது. ஆனாலும் கடவுள் மீது இக்குழந்தை களுக்கு இருந்த நம்பிக்கை சிறிதளவும் தளரவே இல்லை. ஆச்சரியமென்ன வென்றால், தூய்மையாக வாழ வேண்டும் என்று விரும்புவது பாவமா? இவர்கள் இதற்காக இத்தனை சோதனை களையும், வேதனைகளையும் அனுபவிக்க வேண்டுமா? மதரீதியாகப் பார்த்தாலும், தூய்மை என்பது போற்றுதற்குரிய தெய்வீக குணம். இத்தூய்மையின் சக்திக்காகவே, இன்று எத்தனை சக்திகள் பூஜிக்கப்படுகின்றனர்! கிறித்துவர்கள் தூயமேரியை எவ்வளவு போற்று கின்றனர். ஆதியில் ஆதாமும் ஏவாளும் டென் பூங்காவில் தூய்மையாகவே வாழ்ந்தார்கள் என்றும், அவர்கள் எப்போது அத்தோட்டத்தில் இச்சைக்குரிய கனியைப் புசித்தார்களோ, அப்பொழுதே அவர்கள் தூய்மையை இழந்து விட்டதால் சொர்க்க வாழ்வை விட்டே ஓட வேண்டியதாயிற்று என்று கதையில் உள்ளன. இதேபோன்று தேவி தேவதைகள் எப்போது, தமது தூய்மை நிலையினின்றும் விலகி, தேக அபிமானத்தில் கட்டுண்டார்களோ, அப்போதே அவர்கள் தங்கள் சொர்க்க சாம்ராஜ்யத்தை இழந்தார்கள் என்ற வரலாறும் உள்ளது. அதாவது **மனிதன் என்றைக்கு தூய்மை இழந்தானோ, அன்றே அவன் வீழ்ச்சியடைந்து விட்டான்** என்பதே பொருள்.

இந்தியாவில் கன்னியர்கள் பூஜிக்கப் படும் வழக்கம் உள்ளது. ஆனால் அதே கன்னியர்கள் திருமணமானதும், வேலைக் காரியைப் போல மதிக்கப்பட்டனர். அத்தோடு தலையில் முக்காடிட்டுக் கொள்ளவும் ஆரம்பித்தனர். காரணம் என்ன? தான் தலை நிமிர்ந்து நிற்க துணை நின்ற தூய்மை எனும் பொக்கிஷம் இழக்கப்பட்டதால் தலை குனிய நேரிட்டது. இதுவே நாளடைவில் பரம்பரை மரியாதையாகப் பழக்கத்தில் ஒன்றிவிட்டன. இன்றும் ஜெகதம்பா, ஸ்ரீ லக்ஷ்மி, ஸ்ரீ சரஸ்வதி தேவிகள் பூஜிக்கப் படுவதும் அவர்களது பாத கமலங்களைத் கழுவி, மலர் சூடி, தலை தாழ்த்தி வணங்கி நிற்பதும் அவர்களிடம் குடி கொண்டிருக்கும் தூய்மை சக்திக்காகத் தானே! எனினும் அவ்வாறு போற்றுதற்கு ரியவராக ஆக வேண்டும் என்று விரும்பினால், எத்தனை தடைகள் கொடுமைகள்! விந்தையல்லவா! எனவே தங்கள் தூய்மையைக் காப்பாற்றிக் கொள்வதில் கொடுமைக்குள்ளான குடும்பப் பெண்கள் தங்கள் துயர் நீங்க இவ்வாறு பாடினார்கள்.

ஓ மனிதனே! நீ உன் கர்மேந்திரியங் களுக்கு அடிமையாகி புலனிச்சைக் குட்பட்டு, விலங்கைப் போன்ற குணமுடையவனாகி விட்டாய்! சத்தியம் எது? பொய் எது? என்பதை உன்னால் கண்டு கொள்ள முடியவில்லை. ஒரு நாள் உன் சரீரம் மண்ணோடு மண்ணாவது உறுதி. உன் தீய செயல் களுக்காக நீ தண்டனை பெற போவதும் உறுதி. தூய்மையாக வாழ விரும்பிய பெண்களை பூஜிக்க வேண்டிய கைகள் கொடுமைப் படுத்துவது முறை தானா?

ஓ மனிதனே! உன்னிடமுள்ள பணத்தால் நீ இறுமாப்படைந்திருக்கிறாய். ஒரு நாள் உன்னுடையது என்று நீ எண்ணுகின்ற அத்தனையும் மண்ணாவது திண்ணம். உனது வீடும், உன்னிடமுள்ள பொன்னும், பொருளும் உனது போக வாழ்வும் துசியோடு தூசியாகக் காற்றில் கலந்து மறைந்து விடும். உனக்கு மிஞ்சியிருக்கும் நாட்கள் தான் எத்தனை? காலம் கடந்து விடுமுன் உன்னை நீ அறிவாய்.

இவ்வாறு அப்போது ஆங்காங்கே பல்வேறு குடும்பங்களில் சொல்லொ ணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருந்த பெண்கள் ஒருநாள் துணிச்சலுடன் கட்டிய துணியுடன் வீட்டை விட்டு வெளியேறி பாபாவிடம் தஞ்சம் புகுந்தனர். இம்மாதிரி பெண்கள் வந்து சேருவதை ஆரம்பத்தில் பாபா ஊக்குவிக்கா விட்டாலும் பெண்களின் நிலை கண்டு அவர்களை வரவேற்று அடயமளித்தார். திக்கற்ற வர்களுக்கு தெய்வமே துணை என்பதற்கிணங்க சிவபாபாவின் துணை இவர்களுக்குக் கிடைத்து விட்டது. இதனால் இவர்கள் கடைசியில் தாங்கள் வந்து சேர வேண்டிய இடத்திற்கு வந்து விட்டதாக அக மகிழ்ந்தனர். பாபாவின் அன்பிலும், ஆதரவிலும் மகிழ்ச்சியாகக் காலம் கழித்ததோடு, விரைவிலேயே ஞானத்தைப் போதிக்கும் ஆசிரியர் களாகவும், உலக சேவர்களாகவும் உயர்ந்தனர். இவ்வாறாக தூய அன்பும் அமைதியும் ஆனந்தமும் நிறைந்த விலை மதிக்க முடியாத வாழ்வு அவர்களுக்குக் கிட்டியது.

# கேள்வி - பதில்

**கேள்வி - நான் ஒரு நேரடி கேள்வி கேட்கிறேன் - நீங்கள் பகவானை பார்த்திருக்கிறீர்களா?**

**பதில் -** நாங்களும் நேரடியாக பதில் கொடுக்கிறோம். ஆம் ஒரு தடவை இல்லை பல தடவைகள் பார்த்திருக்கிறோம். மேலும் அவரிடமிருந்து அந்த மாதிரி தெய்வீக கண்ணைப் பெற்றிருக்கிறோம். அதன் மூலம் எப்பொழுது விரும்புகிறோமோ அப்பொழுது அவரை பார்க்க முடியும். மேலும் பார்க்க மட்டும் இல்லை, மாறாக அவரோடு உறவையும் ஏற்படுத்திக் கொண்டு விட்டோம். நாங்கள் மிக நெருக்கமுடையவர்களாக ஆகிவிட்டோம், அவர் எங்களுடையவராக ஆகிவிட்டார். அவர் எங்களுடைய உயர்ந்த நண்பனாகி விட்டார். ஒருவேளை நீங்கள் விரும்பினால் நாங்கள் அவரோடு உங்களுடைய தெய்வீக சந்திப்பையும் செய்விக்க முடியும்.

**கேள்வி - நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும். நாங்கள் எப்பொழுது சிறிய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறோம் என்றாலும் மிகுந்த சிரமங்கள் வருகின்றன, இது பெரிய தலைவலி என்று யோசிக்கிறோம். ஆனால் உங்களிடம் எப்பொழுதுமே பெரிய பெரிய நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன, ஆயிரக் கணக்கானோர் இங்கு வருகிறார்கள். ஆனால் உங்களுடைய அனைத்து காரியங்களும் சுலபமாக நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கு பின்னால் என்ன இரகசியம் இருக்கிறது?**

**பதில்** - இங்கே உள்ள சமர்ப்பண உணர்வு தான். இதற்குப் பின்னே இருக்கும் இரகசியம் ஆகும். இங்கே சுமார் 12,000 பிரம்மா குமார் சகோதர சகோதரிகள் சமர்ப்பணம் ஆகியிருக் கிறார்கள். இவர்கள் பாரதம் மற்றும் வெளி நாடுகளில் இந்த ஈஸ்வரிய காரியத்தை உறுதியோடு மற்றும் தன்னுடைய விருப்பத்தோடு வெற்றிகரமாக செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கு எங்களுடைய மவுன்ட் அபுவிலும் ஆயிரம் சகோதர சகோதரிகள் முழுமையான சமர்ப்பண ரூபத்தில் இருக்கிறார்கள். அதில் அனைவரும் தகுதிகள் நிறைந்தவர்கள். இஞ்சினியர்கள், டாக்டர்கள், எழுத்தாளர்கள், பத்திரிக்கையாளர்கள், ஓவியர்கள், பாடகர்கள், கலைஞர்கள் ஆகியவர்களிலிருந்து மர ஆசாரி மற்றும் இரும்பு வேலை செய்யக்கூடியவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த ஈடுபாடோடு மற்றும் மும்முரமாக காரியம் செய்து அனைத்தையும் பிரபுவிடம் அர்ப்பணம் செய்து எப்பொழுதும் பிரசன்னமாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை எந்த வொரு மனிதன் அல்லது இயக்கத்திற்கு இன்றி பரமாத்மாவிடம் அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். எனவே இந்த முழுமையான காரியங்கள் சுலபமாக நடந்து கொண்டிருக்கின்றன. இவ்வளவு பேர் தன்னை சமர்ப்பணம் செய்திருக்கிறார்களா என்று நீங்களே யோசித்துப் பாருங்கள்.



# கடவுளின் திட்டம் எப்போதும் நன்மைக்கே!

சிறுகதை: பிகு. பாலாஜி, புதுக்கோட்டை

ஒரு ஊரில் ஒரு பிரபலமான கோயில் ஒன்றை சுத்தம் செய்யும் பெருக்குநராக மோகன் என்பவன் இருந்தான். அவன் தனது காரியத்தை மிக நேர்மையாகவும், ஆத்மார்த்மாகவும் செய்து வந்தான். நாள் தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அந்த கோயிலுக்கு வந்து இறைவனை தரிசனம் செய்து விட்டுச் செல்வதை அவன் பார்த்தான். இறைவன் முழு நாளும் நின்று கொண்டே அனைவருக்கும் தரிசனம் கொடுப்பதால் கண்டிப்பாக அவர் சோர்வடைந் திருப்பார் என்று அவன் நினைத்தான். ஆகையால் ஒரு நாள் அவன் கள்ளங்கபடமின்றி இறைவனிடம் கேட்டான் - இறைவா! நான் ஒரே ஒரு நாள் உங்களுக்குப் பதிலாக நிற்கிறேன். தாங்கள் சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். அதற்கு அந்த இறைவன் கூறினார் - நான் ஓய்வெடுக்க வேண்டும் என்ற அவசியமில்லை. இருந்தாலும் உனது விருப்பத்திற்காக ஒரே ஒரு நாள் நான் உன்னை என்னைப் போல் மாற்று கின்றேன். நான் சொல்கின்ற படி நீ நடந்தால் போதுமானது. அதாவது நீ என்னைப் போன்று நின்று கொண்டே ஒவ்வொருவரையும் பார்த்து புன்முறுவல் செய்ய வேண்டும் மற்றும் ஆசி வழங்கிக் கொண்டே இருக்க வேண்டும். எதிலும் குறுக்கிடக்கூடாது மற்றும் யாரிடத்திலும் எதையும் பேசக்கூடாது. நான் ஒரு தேவதை என்பதை சதா நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இங்கு நடக்கும் ஒவ்வொன்றிற்கும் நான் (இறைவன்) ஒரு மாஸ்டர் திட்டம் வைத்திருப்பதாக நினைக்க வேண்டும். இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டால் ஒரு நாளுக்கு உன்னை நான் அவ்வாறு மாற்று கின்றேன் என்று இறைவன் கூறினார். இதை மோகன் ஏற்றுக் கொண்டான்.

அடுத்த நாள் காலையிலேயே மோகன் இறைவனின் இடத்தை எடுத்துக் கொண்டான். முதலில் ஒரு பெரிய செல்வந்தர் வந்து இறைவன் வடிவில் இருக்கும் மோகனை வணங்கினார். அவர் ஒரு அழகான நன்கொடையை அர்ப்பணம் செய்து விட்டு தனது வியாபாரம் நன்றாக செழிப்படைய வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். திரும்பிச் செல்லும் பொழுது அந்த செல்வந்தர் கவனக்குறைவாக தனது பணப்பெட்டியை வைத்து விட்டு சென்று விட்டார். இப்பொழுது இறைவன் உருவில் இருக்கக்கூடிய மோகன் அவரை அழைக்கவில்லை. தன்னை கட்டுப் படுத்திக் கொண்டு அமைதியாக இருந்து விட்டார்.

சிறிது நேரத்தில் ஒரு ஏழை அங்கு வந்தார். அவர் ஒரே ஒரு ரூபாயை அந்த உண்டியலில் போட்டு விட்டு தன்னால் இவ்வளவு தான் கொடுக்க முடியும் என்றும் நான் எப்பொழுதும் இறை சேவையில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டு;ம் என்றும் வேண்டிக் கொண்டார். மேலும் தனது குடும்பம் தற்பொழுது அத்தியாவசிய தேவை களையும் பூர்த்தி செய்யுமளவிற்கு இல்லை யென்றும் கூறினார். ஆனாலும் இறைவன் ஒரு நல்ல முடிவு கொடுப்பார் என்ற நம்பிக்கையில் அதனை இறைவனின் கைகளில் ஒப்படைத்து விட்டார். வேண்டுதல் முடிந்த பின் கண்களை திறந்து பார்த்தபொழுது அந்த செல்வந்தன் விட்டுச் சென்ற பணப்பெட்டி அவரது கண்களில் தென்பட்டது. அந்த ஏழை மனிதன் தெய்வத்தின் கருணைக்கு நன்றி கூறி விட்டு அந்த பணப்பெட்டியை கடமின்றி கொண்டு சென்றான்.

இறைவன் வடிவில் இருக்கும் மோகன் எதுவும் கூறாமல் சிரித்த முகத்துடன் இருந்து விட்டார்.

பிறகு ஒரு மாலுமி உள்ளே வந்தார். தான் மிக நீண்ட பயணம் செல்லப்போவதாகவும், பாதுகாப்பான பயணத்திற்காகவும் அவர் இறைவனை வேண்டிக் கொண்டார். அதே நேரத்தில் அங்கு அந்த செல்வந்தனும் போலீஸ் காரர்களுடன் வந்து தனது பணப்பெட்டியை யாரோ திருடி விட்டதாகவும், அங்கு அந்த மாலுமி வணங்கிக் கொண்டிருப்பதால் அந்த மாலுமி தான் திருடியிருக்க வேண்டும் என்று நினைத்து அவரை கைது செய்யும்படி போலீசிடம் கேட்டுக் கொண்டார்.

இப்பொழுது அங்கு இறைவன் வடிவில் இருக்கக்கூடிய மோகன் அந்த மாலுமி திருடன் அல்ல என்று கூற விரும்பினார். ஆனால் அவரால் முடியவில்லை. அவன் மிகுந்த ஏமாற்றம் அடைந்தான். அந்த மாலுமி இறைவனைப் பார்த்து ஏன் ஒன்றும் அறியாத என்னை தண்டிக்கின்றாய்? என்று கேட்டார். அந்த செல்வந்தரோ திருடனை கண்டு பிடித்து கொடுத்ததற்காக இறைவனுக்கு நன்றி கூறினார்.

இறைவன் வடிவில் இருக்கும் அந்த மோகனால் இனிமேலும் பொறுத்திருக்க முடிய வில்லை. உண்மையான இறைவன் இப்பொழுது இருந்திருந்தால் அவரும் கண்டிப்பாக தலை யிட்டிருப்பார் என்று நினைத்தார். ஆகையால் அந்த மாலுமி திருடன் அல்ல என்று பேச ஆரம்பித்தார். அந்த ஏழை மனிதன் தான் பணப் பெட்டியை எடுத்து சென்றிருக்கின்றார் என்று கூறினார். அந்த செல்வந்தர் மிகவும் நன்றி கூறினார். கூடவே அந்த மாலுமியும் இறைவனுக்கு நன்றி கூறினார்.

அன்று இரவு உண்மையான இறைவன் மோகன் முன் வந்து இன்றைய முழு நாளும் எப்படி இருந்தது? என்று கேட்டார். அதற்கு மோகன் இது எளிதானது என்று தான் முதலில் நான் நினைத்தேன். ஆனால் உங்களது நாட்கள் அவ்வளவு எளிதானது அல்ல என்பதை இப்பொழுது புரிந்து கொண்டேன் என்று கூறினார். பிறகு நடந்த முழு கதையையும் அவர் இறைவனிடம் கூறினார். இந்த செய்தியை கேட்டதும் இறைவன் கோபமடைந்து விட்டார். தான் செய்த நல்ல காரியத்தை இறைவன் புகழ்வார் என்று மோகன் நினைத்தான்.

இறைவன் கேட்டார், நீ ஏன் ஒப்பந்தத்தை மீறினாய்? நீ என் மீது நம்பிக்கை வைக்க வில்லை. இங்கு வருபவர்களது உள்ளங்களை நான் புரிந்து கொள்ளவில்லை என்று நீ நினைக் கின்றாயா? அந்த செல்வந்தன் கொடுத்த அனைத்து செல்வமும் திருடப்பட்ட செல்வ மாகும். மேலும் அவர் கொடுத்தது ஒரு சிறிய பகுதியே ஆகும். ஒரே ஒரு ரூபாய் வைத்திருந்த அந்த ஏழைக்கு அதுவே கடைசி ரூபாயாகவும் இருந்தது. அதையும் அவன் நம்பிக்கையுடன் என்னிடத்தில் கொடுத்து விட்டான்.

அந்த மாலுமி எந்த தவறும் செய்ய வில்லை தான். ஆனாலும் அந்த மாலுமி அன்று இரவு பயணித்திருந்தால் அவர் இறந்திருப்பார். ஏனெனில் இன்று ஆபத்தான வானிலையாக இருக்கிறது. அவர் கைது செய்யப்பட்டால் சிறையில் இருப்பார். அவர் மிகப் பெரிய இயற்கை சீற்றத்திலிருந்து பாதுகாக்கப்பட்டிருப்பார். அந்த பணப்பெட்டியானது அந்த ஏழையிடம் தான் செல்ல வேண்டும், ஏனெனில் அதை அவர் எனது சேவைக்கு பயன்படுத்துவார். இதன் மூலம் நான் அந்த செல்வந்தனின் கர்மக் கணக்கையும் குறைத்து விடுவேன், அதே நேரத்தில் அந்த மாலுமியையும் பாதுகாத்து விடுவேன். ஆனால் நீ உன் மன வழிப்படி நடந்து எனது அனைத்து திட்டங்களையும் அழித்து விட்டாய்/ இப்போது என்ன செய்வது. ஏனோ மனிதனாகவே இருந்திருக்கலாம் என்று மோகன் நினைத்தான். ஏனெனில் **இறைவனின் திட்டத்தில் எல்லாமே நன்மைக்கே! இதை மனிதனால் செய்ய முடியாது.**

# கேள்வி - பதில்

**கேள்வி - தூய்மை பிரம்மச்சர்யம் மட்டும் இல்லை.... நாம் பிரம்மாச்சாரியாகவும் ஆக வேண்டும். நாம் தூய்மையின் சேத்திரத்தில் எந்தெந்த விஷயங் களில் பிரம்மாச்சாரி ஆக வேண்டும்?**

**பதில்:** சிவனின் குழந்தையாகி பிரம்மச்சரி யத்தின் விரதத்தை கடைப்பிடிப்பதோ செய்ய வேண்டிய முதல் காரியம் ஆகும். ஆனால் சம்பூர்ண தூய்மையோ ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சூரியனுக்கு சமமானதாகும். தூய்மையான ஆத்மாக்களோ இந்த உலகிற்காக வரதானம் ஆவார்கள், அவர்கள் உலகின் கண்மணி மற்றும் படைப்பின் ஆதாரமூர்த்தி ஆவார்கள்.

பிரம்மச்சர்யத்தை கடைப்பிடித்த பிறகு காமத்தின் அனைத்து பலன்களை மற்றும் பாவனைகளை தியாகம் செய்து கனவையும் தூய்மையானதாக ஆக்க வேண்டும். ஆண், பெண் அனைவரும் ஆத்மாக்கள், நாமும் சில நேரம் ஆணாகவும், சில நேரம் பெண்ணாகவும் இருந்திருக்கிறோம். மற்றவர்களும் சில நேரம் ஆணாகவும், சில நேரம் பெண்ணாகவும் இருந்திருக்கிறார்கள் - இந்த ஆத்மீக உணர்வை அதிகரிக்க வேண்டும்.

தூய்மையான ஆத்மாக்கள் நாம் உலக நன்மை செய்ய வேண்டும், நாம் உலகிற்கு நன்மை செய்பவர்கள். எனவே சிந்தனையை சுபபாவனை, மன்னிக்கும் உணர்வு மற்றும் சுயநலமற்ற அன்பால் நிரப்பி விட வேண்டும். பழிக்குப் பழி வாங்கும் பாவனை நம்மை லட்சியத்திலிருந்து வெகு தொலைவில் எடுத்துச் சென்றுவிடும்.

தூய்மையான ஆத்மாக்கள் நாம் உலக நன்மை செய்ய வேண்டும், நாம் உலகிற்கு நன்மை செய்பவர்கள். எனவே சிந்தனையை சுபபாவனை, மன்னிக்கும் உணர்வு மற்றும் சுயநலமற்ற அன்பால் நிரப்பி விட வேண்டும். பழிக்குப் பழி வாங்கும் பாவனை நம்மை லட்சியத்திலிருந்து வெகு தொலைவில் எடுத்துச் சென்றுவிடும்.

வார்த்தைகள் மிக சுகம் நிறைந்ததாக மற்றும் நிர்மலமானதாக, கோபம், ஆணவம் என்பதிலிருந்து விடுபட்டதாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் மோதல்கள் இல்லாத தூய்மையான நிலையின் சுகம் பிராப்தி ஆகும். வாழ்க்கையிலிருந்து சோம்பல், வீணானது மற்றும் சாதாரண எண்ணம், பொறாமை, வெறுப்பு, எனது, உனது விடுபட்டுக் கொண்டே இருந்தால் தூய்மையின் ஆன்மீகத் தன்மை முகத்தின் பிரகாசத்தை அதிகரித்துக் கொண்டே இருக்கும். அந்த மாதிரி மகான் பவித்திர ஆத்மா எப்பொழுதும் பரமாத்மா ரசனையில் மற்றும் ஆனந்தத்தில் திருப்தியாக இருக்கும். இவை அனைத்தும் தான் பிரம்மா பாபாவை பின்பற்றி நடப்பது.

**அமைதி, வெப்பமான (கோபம்) சூழலில் - ஒரு குளிர்சாதன பெட்டி போன்றது**

**தூய்மை என்பது இறைவனுடன் நேர்மையாக இருத்தலாகும்**

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அன்னபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்:3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை-40 அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ்,சென்னை-5
R.No.49463/87